பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 1 சனிக்கிழமை (17.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :295

### கட்சிக் கோட்பாட்டை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை

# சு.க. கொள்கையில் நின்றால்தான்

# மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம்

## அமெரிக்காவில் சந்திரிகா தெரிவிப்பு

நியூயோர்க்,செப்ரெம்பர்17

**“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை உறுதிப்படுத்துபவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான நியமனம் வழங்கப்படும்.”**

**-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவில் வைத்து இவ்வாறு உறுதியாகத் தெரிவித்தார் என இணையத் தளச் செய்திகள் தகவல் வெளியிட்டன.**

ஐ.நா. பொதுச்சபையின் 60ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றிருக்கும் ஜனாதிபதி, கடந்த புதன்கிழமை ஆசிய சமூகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிடும்போது இவ்வாறு தெரிவித்தார் என இணையத் தளம் ஒன்று தகவல் வெளியிட்டது. அவர் அங்கு மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

புதிய ஜனாதிபதி அதிகாரத்திற்கு வந்தாலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சமாதான நடவடிக்கைகள் எக்காரணம் கொண்டும் முறிந்துவிடமாட்டா.

நாட்டில் அமைதியை நோக்கியதான முன்நகர்வு எக்காரணம் கொண்டும் மீளத் திரும்பிவிட முடியாதது என்பதை உறுதிபடத் தெரிவிக்கிறேன்.

விடுதலைப் புலிகளோடு அமைதி முயற்சிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதில் எமது கட்சிக்குள் எவ்வித கருத்து வேறுபாடும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வரதர் அணி முக்கியஸ்தர் சுட்டுக்கொலை!

வவுனியா,செப்.17

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று வவுனியாவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஏ-9 வீதியில் வவுனி[illegible] மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்[illegible] நேற்றிரவு 9.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியைச் சேர்ந்த ஆர்.லோகநாதன்(வயது 45) என்பவரின் சடலமே இனங்காணப்பட்டிருப்பதாக வவுனியா

(16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு!

கொழும்பு,செப்.17

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா இத்தகவலைத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து கடந்த மாதம் 12ஆம் திகதி முதல் இலங்கையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மீது சர்வதேச அழுத்தம் ஐ.நாவில் ஜனாதிபதி கோரிக்கை!

நியூயோர்க், செப்.17

"சமாதானப் பேச்சு மேசைக்குப் போகுமாறு விடுதலைப் புலிகளுக்கு உண்மையான அழுத்தங்களைக் கொடுக்கும்படி நாங்கள் சர்வதேச சமூகத்தை கேட்டிருக்கிறோம். சமாதான முன்னெடுப்புக்கான முன்னைய அணுகுமுறைகள் எல்லாம் வெளிவிவகார அமைச்சரின் (லஷ்மன் கதிர்காமர்) கொலையை அடுத்து பயங்கரவாத வழிமுறைகளிலிருந்து புலிகள் விலகப் போவதில்லை என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. எனவேதான் சர்வதேசசமூக அழுத்தத்தின் பிரயோகத்தை கோரும் இந்த அணுகுமுறையை நாடியிருக்கிறோம்."- என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.நாவின் 60ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

ஒரு நாட்டின் இறைமைக்கு சவால் விடுக்கும் இயக்கங்களுக்கு எதிராக சக உலக நாடுகள் தடை விதிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு உலக நாடுகளின் தலைவர்களை நோக்கி அழைப்பு விடுத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியில் காவலில் உள்ள

## 3 பொலீஸாரையும் உறவினர்கள் சந்திப்பதற்குப் புலிகள் அனுமதி

தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பொலீஸார் மூவரையும் சந்திக்க அவர்களின் உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நுழைந்தபோது கைதுசெய்யப்பட்ட - சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைக்கப்பட்டுள்ள - பொலீஸார் மூவரையும் அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரினூடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதை விடுதலைப் புலிகள் ஏற்றிருக்கிறார்கள் என சிறுவர்பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

இச்சந்திப்புக்கான திகதியை விடுதலைப் புலிகள் அறிவித்ததும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் சம்பந்தப்பட்ட மூவரின் உறவினர்களையும் வன்னிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ-க)

## 29ஆம் திகதி வர்த்தமானியில் தேர்தல் அறிவிப்பு வெளியாகும்?

கொழும்பு,செப்.17

ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 29ஆம் திகதி வெளியிடப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறவேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால், இவ்வருடத்தில் எப்போது தேர்தலை நடத்துவது என்பது குறித்து தேர்தல்க ஆணையாளர் இன்னும் திகதி நிர்ணயிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் தினம் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே நிர்ணயிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் பெரும்பாலும் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படாதபோதும் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்கள், கட்சிகளிடையேயான சந்திப்புகள், தேர்தல் முன்னெடுப்புகள் என்பன தற்போதே சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன. (எ-க-ரி-12)

### யாழ். பொலீஸ் அத்தியட்சகர் கொலை:

## கைதான கோபியை 10 சாட்சிகளில் எவரும் அடையாளம் காட்டவில்லை

கொழும்பு,செப்.17

யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் வீரபாண்டியன் கோபி, இவ்விடயம் தொடர்பாக நேற்று நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டார். ஆனால், சம்பந்தப்பட்ட பத்து சாட்சிகளில் எவருமே சந்தேகநபரை அடையாளம் காட்டவில்லை எனத் தெரியவந்தது.

யாழ்ப்பாணத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டவரப்பட்ட கோபி வெலிக்கடைச் சிறச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஒரு கை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக இவரை அடையாள அணிவகுப்பில் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் கடந்த தவணை இத்தகைய

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சுக்கு இன்னும் இடம் தீர்மானிக்கப்படவில்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,செப்.17

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக புலிகளுடன் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்ட பேச்சுகளை எங்கே நடத்துவது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென்று அரசாங்கம் நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா இதனை அறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாக அமுல்படுத்துவது தொடர்பில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்கு அரசாங்கம் எப்போதுமே தயாராகத்தான் இருக்கிறது. இது தொடர்பில் ஆராய்வதற்காக நோர்வே அரசு விசேட பிரதிநிதியொருவரை அடுத்தவாரம் இலங்கைக்கு அனுப்புகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் படுகொலை வழக்கு 27ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,செப்.17

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பான வழக்கு மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விடயம் நேற்றுக் கடுவெல நீதிமன்றில் நீதிவான் சாம்ப ஜானகி ராஜரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது அங்கு ஆஜரான கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலீஸ் அதிகாரி, சிவராம் கொலை தொடர்பான முக்கிய விடயங்கள் மற்றும் ஆதாரங்களைக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம் நடத்திய விசாரணைகளின்போது பெறமுடிந்ததாகத் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஈழத்தமிழர்கள் தங்களை ஆள்வதற்கு ஐ.நா. மன்றம் துணைநிற்க வேண்டும்

## முல்லை எழுச்சி மாநாட்டில் ஈழவேந்தன்

முல்லைத்தீவு,செப்.17

ஈழத்தமிழர்கள் தங்களை ஆள்வதற்கு ஐ.நா. மன்றம் துணைநிற்கவேண்டும்.

- இவ்வாறு கோரியுள்ளார் தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க. ஈழவேந்தன்.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஈழவேந்தன் எம்.பி. தமிழிலும் ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்தினார். ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆங்கிலத்தில் உரை நிகழ்த்திய எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழ் மக்கள் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக எம்மண்ணிலேயே வேரறுக்கப்படுகின்றனர். ஏதுமற்ற ஏதிலிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்த எமது ஏக்க நிலையைப் போக்க ஐ.நா. மன்றம் முன்வரவேண்டும்.

1986இல் ஐ.நா. மன்றத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா மாநாட்டிற்கு வருகை தந்திருந்த பிறநாட்டுப் பேராளர்களோடும் ஐ.நா. மன்றத்தின் பொதுமக்கள் தொடர்பாளர் மக்காதியோடும் இந்தியாவின் நிரந்தரப் பேராளர் நடராஜன் கிருஸ்ணனுடனும் உரையாடியபோது ஒரு நாட்டில் இனப்படுகொலை நடக்கின்ற வேளை மக்கள் கிளர்ந்தெழுவதை ஐ.நா. சாசனம் ஏற்கின்றது என்பதனை அவர்கள் ஒப்புக்கொண்டனர். எனவே, ஈழத்தமிழர் எதிர்நோக்கும் பேரழிவைத் தடுக்க தமிழன் தன்னை ஆளுகின்ற முறையில் தமிழீழம் மலர ஐ.நா. மன்றம் துணைநிற்கவேண்டும். விரைவில் ஐ.நா. மன்றத்தில் எங்கள் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கவேண்டும். அதை நாம் தாழ்ந்து பணிந்துவணங்கிட வேண்டும்.

உயர்ந்த தன்னலத்தின் அடிப்படையிலாவது இந்தியாவினது வெளியுறவுக் கொள்கை மாற்றத்திற்குள்ளாகவேண்டும். ஈழத்தமிழருக்கும் இந்தியாவிற்குமிடையில் தொப்புள் கொடி உறவுண்டு. மொழியால், பண்பால் நாகரிகத்தால் ஏற்றுள்ள வாழ்க்கை நெறியினால் எமக்கும் இந்தியாவிற்குமிடையில் பின்னிப் பிணைந்த ஒரு நெருக்க உறவுண்டு. நாம்தான் இந்தியாவின் நிலையான நண்பர்கள். சிங்களவர்தான் இந்தியாவின் நிலையான எதிரிகள். தமிழீழ விடுதலையும் இந்தியப் பாதுகாப்பும் பின்னிப்பிணைந்தவை என்றும் தமிழீழம் காக்கப்படுகின்றபோது இந்தியா காக்கப்படுகிறது. தமிழன் அழிகின்றபோது இந்தியாவிற்கும் அழிவு ஏற்படும் என்று ஒருமுறை இந்திரா காந்தி அம்மையாரிடம் நான் கூறியிருந்தேன். -என்றார்.

தமிழில் உரை நிகழ்த்திய ஈழவேந்தன் எம்.பி. தமது உரையில் தெரிவித்ததாவது:-

1976 நடுவர் அற்ற நீதிமன்றத்தில் ('ட்ரயல் அட் பார்') 3 நீதிபதிகள் வீற்றிருந்தனர். தமிழர் சார்பில் 65 வழக்கறிஞர்கள் வாதிட்டனர். அரசமைப்பில் மிக்க தேர்ச்சிபெற்ற முருகேசு திருச்செல்வம் ஈழத்தமிழர் கோரி நிற்கும் ஈழம் என்பது இல்லாத ஒன்றினைக் கேட்கவில்லை. இருந்ததை இழந்ததை நாம் நிலைநாட்டுகிறோம் என்று வாதிட்டார். அத்தோடு ஈழத்தமிழர் கோரி நிற்கும் தமிழீழத்தை பிரிவினை எனக் கூறுவது வழக்காற்றின் அடிப்படையில் நாம் செய்கின்ற தவறு - பழக்கதோஷம். உண்மையில் நாம் முன்பு வலியுறுத்தியதற்கமைய இருந்ததை - இழந்ததை மீண்டும் நிலைநாட்டுகின்றோம். அதை தமிழில் கூறின் தமிழீழக் கோரிக்கை என்பது எமது நாட்டை மீளமைத்தல் அல்லது மீளக் கட்டியமைத்தல் என்றுதான் கூறவேண்டும் என்று வாதிட்ட திருச்செல்வம் அவர்கள் தன் வாதத்தை மேலும் விரித்துக் கூறுகையில் -

தமிழ் நாட்டின் எல்லைப் பரப்பு பெரிது. தமிழ் மக்களின் எண்ணிக்கையும் பெரிது. ஆனால், 14ஆம் நூற்றாண்டு - 1837 இல் அது தெலுங்கரின் - ஆந்திரரின் படையெடுப்புடன் தமிழ் நாட்டைத் தாம் ஆளும் தன்மையைத் தமிழர் இழந்துவிட்டனர். ஆனால், ஈழத்தில் 1619ஆம் ஆண்டுவரை முடியோடு கொடியோடு சீரோடு சிறப்போடு நல்லூரை ஆண்ட சங்கிலிய மன்னன் ஆட்சி முடிவுற்ற நிலையில் 19ஆம் நூற்றாண்டு தொடக்க காலம் வரை அதாவது 1803ஆம் ஆண்டு வரை பண்டாரவன்னியன் வன்னிப் பெருநிலத்தை அந்நியனுக்கு அடிபணியாது ஆண்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

இலங்கை என்பது ஒரு நாடல்ல மாறாக ஒரு தீவு. இத்தீவில் பல்வேறு திட்டவட்டமான எல்லைப் பரப்புகளில் கண்டிய சிங்களவரும் கரையோரச் சிங்களவரும் தமிழர்களும் தமது மொழி, பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் முறை ஆகியவற்றை பேணிக்காத்து வருகிறார்கள் இவர்கள் தமது தனித்துவத்தை முற்றாக இழந்து ஒன்றாக மாறவேண்டும் என எண்ணுபவர்கள் பொறுப்பற்றவர்கள் என்று 1926இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க யாழ்பாணக் கல்லூரியில் உரை நிகழ்த்தினார். எனவே, நாம் ஒக்ஸ்வேட் பல்கலைக்கழகத்தில் பயின்ற மெத்தப் படித்த மேதாவி பண்டாரநாயக்க ஏற்றதைத்தான் நாங்கள் நினைவுபடுத்துகின்றோம். இதை உணராத நிலையில் அவரின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க அன்று எம்மீது வழக்குத் தொடுத்தது எள்ளி நகையாடத்தக்கது என்றார். (எ)

# பொங்குதமிழை பொலிவுறச் செய்ய யாழ்.குடாநாட்டில் விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,செப்.17

தமிழினத்தின் அதியுயர் இலட்சியமாகிய விடுதலையின் தாற்பரியத்தை சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டவும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் வகையிலும் எதிர்வரும் 30ஆம் திகதியன்று முன்னெடுக்கப்படவிருக்கும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு பாரிய அளவில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். பல்கலைக்கழகத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக இடம்பெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடல், தென்மராட்சிப் பகுதி கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இணைந்த கூட்டம் ஆகியவற்றில் பல முடிவுகள் எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சங்கானை ப.நோ.கூ.சங்க ஊழியர்களின் கலந்துரையாடல், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர், ஆசிரியர்களுடனான சந்திப்பு ஆகியனவையும் நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பொங்கு தமிழ் நிகழ்விற்குப் பலம் சேர்க்கும் வகையில் திருநெல்வேலி, கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களில் வீடு வீடாகப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொங்கு தமிழ் தொடர்பான சகல விளக்கங்களையும் மக்களுக்குத் தருவதே இதன் பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு பொங்கு தமிழுக்கான ஏற்பாடுகளுக்கான செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்தனர்.

யாழ்.நகரின் சகல இடங்களிலும் ஏற்பாடுகள் முழுமையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அராலி, வழக்கம் பரை சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் உடுவில் பிரதேச சபை, காரைநகர் மற்றும் அளவெட்டி ப.நோ.கூ. சங்கங்கள், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் நாவாந்துறை விளையாட்டுக்கழகம் என்பனவற்றிலும் ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்றன. (ஒ)



நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக பட்டதாரிப் பயிலுநர்கள் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி றோகித பிரியதர்சனவிடம் நேற்று மகஜர் கையளித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம். (படம் : பகிர்)

## மரணத்துக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை

யாழ்ப்பாணம், செப்.17

தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மரணமான சம்பவம் தொடர்பாக மரண விசாரணைகள் இன்னும் நடைபெறவில்லை என்று சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

ஹெட்டி ஆராய்ச்சிக்கே பந்துல ஹெட்டி ஆராச்சி என்ற குறிப்பிட்ட இந்தச் சிப்பாயின் மரணத்துக்கான காரணம் தொடர்பாக ஏற்கனவே காதலில் தோல்வியடைந்து தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்தார் என வெளியான தகவல்களில் உண்மைத் தன்மை இதுவரை தெரியவரவில்லை என்றும் -

மரண விசாரணையின் பின்பே உண்மையான காரணங்கள் தெரியவரும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக,சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-117)




## ஊர்காவற்றுறையில் இன்றும் நாளையும் இந்து அறநெறி ஆசிரியர் செயலமர்வு

தீவுப்பகுதி இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த வதிவிடச் செயலமர்வு இன்றும் நாளையும் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை நடத்தும் இந்த வருடாந்தச் செயலமர்வில் ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இந்தச் செயலமர்வு நடைபெறும்

## பத்திரிகையாளர் சங்க மாதாந்தக் கூட்டம்!

யாழ்ப்பாணம்,செப்.17

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் சிவன்பண்ணை வீதி,கொட்டடியில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சங்க உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-12)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.17

பல்வேறு போட்டிகள், பரீட்சைகள் என்பனவற்றில் பங்குபற்றி வெற்றிபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் க.புண்ணியசீலன் தலைமையில் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-203)

## கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ். மடம் வீதியில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

நூலகத் திறப்பு, முன்பள்ளி ஆரம்பித்தல், இரவு நேரப் பாடசாலை ஆரம்பித்தல் என்பனவும் இடம்பெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.17

அமரர் பரராஜசிங்கம் ஞாபகார்த்தமாக நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகம் பரா வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நொதேண் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கலந்துகொள்வார். (எ-ரி)

* * *

யாழ்ப்பாணம்,செப்.17

எல்லாளன் விளையாட்டுக் கழகத்தினர் 14ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி தனது விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணி - ஆதிசக்தி வி.க. எதிர் ஞானமுருகன் வி.க.
* மாலை 4.30 மணி - விக்னேஸ்வரா வி.க. எதிர் யங்லயன்ஸ் வி.க. (3-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.17

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கழுகுகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ந.குணசீலனும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகனும் கலந்துகொள்வர். (3-190)

★ ★ ★

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள சதுரங்கச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான போட்டியாளர்களைத் தெரிவுசெய்யும் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் 9,11,13,15,20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இரு பிரிவிலும் போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

போட்டியாளர்கள் வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் இன்று காலை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு நேரடியாக வருகை தருமாறு யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (3-203)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## விபரீத விளைவுகளை நோக்கி...!

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது - கன்னி ? 'பட்ஜெட்'டை (வரவு - செலவுத் திட்டத்தை) நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கடந்த நவம்பரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த போது, ஒரு விடயத்தை இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

*''வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது முதல் உள்நாட்டு, வெளிநாட்டு பொருளியலாளர்கள் பலரும் தங்கள் தலையைப் பிய்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றார்கள். வரவு-செலவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியாமல் அவர்கள் எல்லாம் திண்டாடிப் போயுள்ளனர். அவர்கள் மனதில் தீர்க்கப்பட முடியாமல் இருக்கும் ஒரே கேள்வி இதுதான்:- 'நிதி அமைச்சர் மந்திரத்தில் மாங்காய் பறிக்கப் போகின்றாரா? என்பது தான்''* - இப்படிச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

'மக்களின் அரசு மக்களுக்காகத் தயாரித்த வரவு - செலவுத் திட்டம் இது' - என்று அப்போது அரசுத் தரப்பில் பெரிதும் பீற்றிக்கொள்ளப்பட்டது.

முந்திய அரசுகள் எதுவும் அறிவிக்காத அதிரடி சம்பள உயர்வு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்கள் மீதான பெறுமதி சேர் ('வற்') வரி கணிசமாகக் குறைப்பு, அரச ஊழியருக்கு இலகு வீட்டுக் கடன்திட்டம், இலவசக் காப்புறுதி வசதி என்று தாராள அறிவிப்புகள் அப்போது வெளியாகின. ஆடம்பரப் பொருள்கள் சில மீதான வரி உயர்வைத் தவிர, சாதாரண மக்களை நேரடியாகப் பாதிக்கும் புதிய சுமை எதுவும் அத்திட்டத்தில் இல்லாமலிருந்தமை ஆச்சரியத்துக்குரியதாக அமைந்தது.

அதையும் விட ஆச்சரியமான அம்சம் அரசுக்கான வருமானங்கள், அதற்கான வழிவகைகள் குறித்து அதிகம் அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

வெளிநாடுகளில் இருந்து அதிகவருவாயும், உதவியும், நன்கொடைகளும் கடன்களும் திரட்டும் ஏற்பாடுகளும் அதில் இருக்கவில்லை. அதேவேளை, உள்ளூரிலும் உள்நாட்டிலும் அதிக வருமானங்களை ஈட்டுவதற்கான உத்திகள் குறித்தும் அதில் அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

அப்படியானால் அரச செலவினங்களை - துண்டு விழும் தொகையை - நிதி அமைச்சர் எப்படிச் சமாளிக்கப் போகின்றார்? - இது புரியாமல் தான் தவிக்கின்றார்கள் பொருளாதார வல்லுநர்கள்என்று கடந்த நவம்பர் இறுதியிலேயே சுட்டிக்காட்டியிருந்தோம்.

*''ஒட்டுமொத்தத்தில் சமாதான நம்பிக்கையையும் தராத - பொருளாதார உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தாத - வெற்றுவேட்டு வரவு -செலவுத் திட்டமாகவே இது அமையும் என்ற எதிர்பார்ப்பே ஏற்பட்டுள்ளது.*

*''வழக்கமாக வெளியில் இனிப்புப் பூசப்பட்ட - உள்ளே கசப்பு மருந்தைக் கொண்ட - 'கப்ஸ்யூல்' (குளிசை) பாணியிலேயே வரவு-செலவுத் திட்டங்கள் நமது நாட்டில் சமர்ப்பிக்கப்படுவது ஒழுங்கு. இந்த வரவு -செலவுத் திட்டத்திலும் கூட வெளியில் இனிப்புப் பூசப்பட்டுள்ளது. ஆனால், உள்ளே சுகப்பு மருந்து அல்ல- எதுவுமே இல்லை- என்பதுதான் ஆச்சரியத்துக்குரியதாகும்.*

*''இந்த வரவு-செலவுத் திட்டம் மூலம் தாராளமாக வாரி வழங்க முன்வந்துள்ள அரசு, அதற்கான நிதித் தேட்டங்களை எங்கு பெறப்போகின்றது என்பது தெளிவுபடுத்தப் படவேயில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. உரிய நிதிக்குரிய சேமிப்பு கையிருப்பில் இன்றி வெறும் பணத்தாள்களை அடித்து விட்டிருக்கும் அரசு. அந்தக் கைங்கரியத்தை நம்பித்தான் இதில் இறங்கியுள்ளதோ என்னவோ...?''*- என்றும் அப்போது குறிப்பிட்டிருந்தோம்.

அக்காலத்தில் ஒட்டி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கானோருக்கு ஒரேயடியாக அரச நியமனங்கள் அள்ளிக் கொடுக்கப்பட்டன. - அரசுக்கான வருமானங்களையோ அவர்களுக்கான மாதாந்த வேதனத்துக்குரிய வரவு வாய்ப்புகளையோ உறுதிப்படுத்தாமல்.

நாம் அப்போது சுட்டிக்காட்டியமை போல, கடந்த வரவு - செலவுத்திட்டம் தொடர்பாக அரசு பொறுப்பின்றி நடந்து கொண்டதன் விளைவு இப்போது அப்பட்டமாக - வெளிப்பட - புலனாக - தொடங்கியுள்ளது.

''வரவு - செலவுத் திட்ட மானியங்கள் எல்லை மீறிவிட்டதால் அவற்றை ஒரேயடியாக வெட்டுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் நிலைமை மோசமாகும்' - என இந்த வருடம் முடிவடைவதற்கு மூன்றரை மாதங்களுக்கு முன்னரே அரசை எச்சரித்திருக்கிறது சர்வதேச நாணய நிதியம் .

"இவ்வருடம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை இலங்கை அரசு சேகரிக்கத் தவறியுள்ளது. வரவு - செலவுத்திட்ட இலக்குகளை மீறி - கட்டுப்பாட்டைக் கடந்து - எரிபொருள்களுக்கான மானியமும் கூடிவிட்டது. துண்டு விழும் தொகையும் 'பட்ஜெட்' எல்லைகளை விஞ்சிவிட்டது. பணவீக்கம் அதிகரித்துவிட்டது. திரள்வுப் பொருளாதார வீதமும் எல்லை கடந்துள்ளது.' - இப்படி சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்திருக்கிறது.

ஒரு புறம் தென்னிலங்கையில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை. நாடாளுமன்றில் பலமற்ற அரசு. ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தமிழர் விரோதப் போக்குடைய பௌத்த, சிங்கள பேரினவாதிகள் ஒன்று திரள்கின்றனர். அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்தம் கேள்விக்குள்ளாகி எப்போது போர் வெடிக்குமோ என்ற பதற்ற நிலைமை. அரசியல் போட்டா போட்டி இனக் குரோதமாக வடிவெடுக்க ஏது நிலை. இவற்றுக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகியிருக்கின்றது. பண வீக்கம் அதிகரித்து பொருள்களின் விலை எக்கச்சக்கமாக எகிறிவிட்டது.

இவற்றின் விளைவு நினைத்துப்பார்க்க முடியாத விபரீதங்களை ஏற்படுத்தலாம்.

# நிலத்தடி தண்ணீர் வளத்தைப் பேண தமிழீழ சுகாதாரச் சேவை நடவடிக்கை!

கிளிநொச்சி,செப்.17

வடக்கு - கிழக்குப் பகுதியில் கழிவு நீரையும் மலசலகூடக் கழிவுகளையும் அகற்றுவதற்கான சுகாதாரம் பேணும் தீர்மானங்களை தமிழீழ சுகாதார சேவைகள் முன்வைத்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும், நிலத்தடி நீரைப் பாதுகாப்பாகவும் பேணுவதனை நோக்கமாகக் கொண்டு சில ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெருமளவு மக்கள் செறிவாக வாழும் நகர்ப்புறங்களில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீரையும் மலசலகூடக் கழிவுகளையும் முறையான கிருமியழிப்புத் தொட்டியினூடாக (Septic pit) சிகிச்சையளிக்கவும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறியளவில் வெளியேறும் கழிவு நீர் மற்றும் மலக் கழிவுகளைப் பாதுகாப்பான உறிஞ்சுகுழி (Soakge pit) அமைத்தும் சுகாதாரத்தைப் பேண வேண்டும் எனும் தீர்மானம் தமிழீழ சுகாதார சேவைகளால் முன்வைக்கப்படுகிறது.

அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் இத்தீர்மானம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் கட்டடங்கள், நிறுவனங்களுக்கான அனுமதி வழங்கும்போது மேற்படி விடயம் கருத்திற்கொள்ளப்படும் - என்றுள்ளது.

(9-202)

# மஹிந்த - ஜே.வி.பியினர் கூட்டு அபசகுணத்துடனேயே ஆரம்பம்!

கொழும்பு,செப்.17

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பியினர் இடையேயான கூட்டு அபசகுணத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஜே.வி.பியினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தியுள்ளார். இதற்கான விழா கடந்தவாரம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

அவ்விழாவின் ஆரம்பத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுபவேளையில் குத்துவிளக்கை ஏற்ற முயற்சித்தார். அப்போது தீப்பெட்டி தீப்பற்றி எரிந்துள்ளது. தொடர்ந்து குத்துவிளக்கை அவர் ஏற்றிவைக்க முற்பட்டபோதும் கூட ஏற்றப்பட்ட சுடர்கள் அனைத்தும் பற்றி எரிந்து உடனடியாகவே அணைந்து போயின. அவரது தோல்விக்கான முன்னறிவிப்புகளே இவையென அவ் விழாவுக்கு வந்திருந்த சில அமைச்சர்கள் மத்தியிலும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் மத்தியிலும் பரவலாகப் பேசப்பட்டுள்ளது.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பேரணிக் கூட்டம் நடைபெறவிருந்த மண்டப வாசலின் சுழல் மின் விளக்கு அலங்காரம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த விளக்கில் மோதுண்ட இரு புறாக்கள் இறந்து வீழ்ந்தன. அப்புறாக்களின் உடல்களிலிருந்து வெளியேறிய இரத்தத்தைக் கடந்துசென்றே விழா மண்டபத்துள் பிரதமர் மஹிந்த பிரவேசித்தார் என்பது குறிப்பிடத் தக்கது - இவ்வாறு அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஒ-206)

## மாகாணப் போட்டியில் முல்லை. மாணவன் முதலிடம்



மல்லாவி,செப்.17

வடக்கு- கிழக்கு மாகாண மட்டத்தில் இடம்பெற்ற விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் முல்லைத்தீவு மாணவர் முதலிடம் பெற்றார்.

முல்லைத்தீவு அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் வைத்தியலிங்கம் கிருஷ்ணதாஸ் என்ற மாணவரே திருகோண மலையில் நடைபெற்ற மாகாணமட்டப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு, ஆழிப்பேரலையால் அழிவுகளைச் சந்தித்தது முல்லைத்தீவுப்பகுதி. கற்றல் வளங்களில் புறக்கணிக்கப்படும் இப்பகுதியைச் சேர்ந்த இந்த மாணவர் தளராது முயற்சி செய்து மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று பலரதும் பாராட்டுக்கு உரியவராகியுள்ளார்.

(ஒ-322)

## உதயவாக்கு

*பாவம், புண்ணியம் என்று எதுவும் இல்லை. உள்ளதெல்லாம் அறியாமை ஒன்றுதான்.*

- ஓர் அறிஞர்.

## நாளை

புரட்டாதி 2
ஞாயிற்றுக்கிழமை
18 .09.2005
திதி: பூரணை
முற்பகல்: 08.35 வரை
நட்சத்திரம் : பூராட்டாதி
பிற்பகல் : 12.39வரை
சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம்: 04.33 - 06.33
(யாவும் பழைய நேரப்படி)

# மலையாள மாந்திரீகருக்கு அடிஉதை; இளைஞர்கள் குழுவின் கைவரிசை!

வலி.வடக்கு,செப்.17

கொக்குவில் கிழக்கில் உள்ளவீடொன்றினுள் நுழைந்த இளைஞர்கள் அங்கிருந்த நபரைத் தாக்கினர். இதில் அவர் காயமடைந்தார்.

தன்னை மலையாள மாந்தீரிகர் என்று கூறிவந்த மேற்படி நபர் பொதுமக்களின் பிரச்சினைகளை மந்திரீகத்தால் தீர்ப்பதாகவும் விளம்பரப்படுத்தி வந்தவர்.

கடந்த 12ஆம் திகதி இரவு குறிப்பிட்ட மாந்திரீகரின் வீட்டுக்குச் சென்ற இளைஞர்கள் சிலர் அவரைத் தாக்கி விரட்டினர். இதில் அவர் காயமடைந்தார்.


இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மாந்திரீகர் தனக்குப் பாதுகாப்புக்காகச் சிலரை வீட்டில் தங்கவைத்திருந்தார் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இளைஞர்கள் அணி ஒன்று மாந்திரீகரின் வீட்டிற்குள் நுழைந்தது.

அவர்களைக் கண்டதும் அந்த வீட்டில் நின்றவர்கள் தப்பியோடி விட்டனர் என்றும்-

இளைஞர் குழு மாந்திரீகரை தாக்கியதுடன் அங்கு நின்றிருந்த இரண்டு ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களை தீக்கிரையாக்கியதாகவும் கூறப்படுகிறது. இச்சம்பவத்தின்போது வீட்டினுள் இருந்த இளம்பெண்கள் சிலரும் தப்பியோடினர் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தாக்குதலின் பின்னர் மாந்திரீகரின் வீட்டிற்குள் சென்ற பொதுமக்கள், அங்கு மதுப்போத்தல்கள், பெண்களின் உள்ளாடைகள் போன்றவை காணப்பட்டதாகக் கூறினர்.(ஒ-86)

குருதிக் கொடையாளர்களே! உங்கள் தியாகத்தை மதிக்கின்றோம்.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




16/3, சீனியர் லேன், கலட்டி,
யாழ்ப்பாணத்தில் வசிக்கும்
**லிங்கேஸ்வரன் - சுபாஜினி**
தம்பதியரின்
செல்வப் புதல்வி


**ருஷிகா**

தனது முதலாவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் இன்று (17-09-2005) சனிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமா, சின்னமாமா, சித்திமார், சித்தப்பாமார், அத்தை, உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங்களுடனும் கற்பக விநாயகர் அருள் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
**து.லிங்கேஸ்வரன்**
(அப்பா).
16/3, சீனியர் லேன்,
கலட்டி.
(40084) (24-32-15-19)

## நேரடி கணனி முறையிலான அச்சீடு

Live Digital Demo



★ இரண்டு பக்கமும் அச்சிடக்கூடிய வாய்ப்பு
★ காகிதத்திலோ/ மட்டையிலோ அச்சிடக்கூடிய வாய்ப்பு
★ பொசிற்றிவ் தேவையில்லை ★ பிளேட் தேவையில்லை
★ நேர்த்தியானதும் மிகவும் துல்லியமான தரம்
★ மிகவும் சிறந்தது குறைந்தளவிலான அச்சீட்டிற்கு

- முகவரி அட்டைகள்
- வாழ்த்து அட்டைகள்
- பெயர் அட்டைகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- செய்முறை விளக்க விவரம்
- எல்லாவகையான சான்றிதழ்கள்
- வர்ண விளம்பர அட்டைகள்
- நன்றி நவிலல் அட்டைகள்
- சிடி,டிவிடி கவர்
- ஆடைத் தொழிலக அட்டைகள்
- புத்தகங்கள்
- திட்ட அறிக்கைகள்
- வாழ்த்து அட்டைகள்
- பலவர்ண சுயவிவரக் கோவை
- புத்தக அட்டைகள்
- விளம்பர அட்டைகள்

*போன்றவற்றை சிறந்த முறையில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.*

**ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் அன் கொனிகா கலர்**
இல.14, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3493
பக்ஸ் : 021 222 3493

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை (13.09.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி - நாகப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் அமரர் சடாசிவம், சின்னராசா அவர்களின் சகோதரியும் பூமணி, சாந்தினிதேவி, சந்திராதேவி (லண்டன்), சந்திரசேகரம் (சுவிஸ்), கேதீஸ்வரன் (கிளி), சறோயாதேவி (ஜேர்மனி), சசீஸ்வரன் - சிவா (லண்டன்), அமரர் சந்திரன், சுதாகரன் (அரசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், ரஞ்சன் (லண்டன்), நிர்மலன் (லண்டன்), பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), பிறேமாவதி (சுவிஸ்), பவானி ஷோபனா (லண்டன்), சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இதயகுமார், சுபாஸ்குமார், லுமேஸ்குமார், துசாந்தகுமார், றொசாந்தகுமார், நிஷாந்தகுமார், கீர்த்தனா, நிரோஜினி, நிர்சனா, நிறோஜன் (லண்டன்), நிறுஜா (லண்டன்), பிறித்தி (சுவிஸ்), பகிதா (ஜேர்மனி), சகிதா (ஜேர்மனி), அபினா (லண்டன்), கபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2005) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா லேன்,
அளவெட்டி வடக்கு. (40046)(32-15-17)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## சின்னத்தம்பி கருணாநிதி

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கருணாநிதி அவர்கள் (14.09.2005) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி (காலஞ்சென்ற ஆசிரியர்)- சின்னத்தங்கச்சி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் விசாககௌரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள்-சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் விமலன் (லண்டன்), சுதர்சன் (கொழும்பு), உமா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜாமினியின் (லண்டன்)அன்பு மாமனாரும் விஸ்ணுஜனின் (லண்டன்) அன்புப் பேரனும் திருமதி தனலட்சுமி பத்மலிங்கம், திருமதி நித்தியலட்சுமி சண்முகராஜா, திருமதி பகவதி ஜெயராஜா (ஆசிரியர், யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க.பா.), கருணானந்தன், கருணாகரன் (புளியங்குளம்), திருமதி பவானி இராமச்சந்திரன், மகாதேவன் (ஜேர்மனி), திருமதி.பாக்கியலட்சுமி ஜெயக்குமார் (ஆசிரியர், யா/கொக்குவில் இ.ஆ.பாடசாலை), திருமதி நந்தினி சபேசன் (கனடா), திருமதி சுகந்தினி சிவயோகன் (நோர்வே) ஆகியோரின் அன்பு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2005) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
தொடர்பு:- 0112385337 (40016)(32-15-17)
தகவல்:
**சி.சின்னத்தங்கச்சி (தாய்).**

## சரவணை நாகமணி

(சாவகச்சேரி பஸ்நிலையம் முன்பாக உள்ள சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்)

சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த சரவணை நாகமணி நேற்றுமுன்தினம் (15.09.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தர்மரட்ணம், வதனி, ரஞ்சினி, றஜனி, குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினி, சந்திரமூர்த்தி, சிவஞானபண்டிதர், ஜீவா, ஜெயமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், விமல், மயூரன், தனு, தீபன், ஜெசிதா, றசிதா, வதன், நிலக்ஸன், கமல், வினோ, சிநேகா, கோபிகா, டெருஷன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.09.2005) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்டி வீதி,*
*பெரிய அரசடி,*
*சாவகச்சேரி.* (சீ/45151)(32-15-17)
தகவல்:
**குடும்பத்தினர்**

## திருடர்கள் நடமாட்டம் அதிகரிப்பு

அரியாலை,செப்.17

நீர்வேலிப் பகுதியில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர். பூதர்மடம் பகுதியில் ஒரே இரவில் ஐந்து வீடுகளில் திருடர்கள் திருட முயற்சித்துள்ளனர்.

இரவுநேரங்களில் இப்பகுதியில் மின்சாரத்தை துண்டித்து விட்டே திருடர்கள் திருட எத்தனிப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-17)

## கடை விற்பனைக்கு

இல.256, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு :-
**சி.விக்னேஸ்வரன்,**
**புது நீதிமன்றக் கட்டடம்.**
T.P.0773 -151245/6
(40019)(32-15-17)

## விற்பனைக்கு

*பழைய ஒடுகள், மாதவார சஞ்சிகைகளான சுபமங்களா, கலைமகள், மங்கை, குமுதம், ஆனந்தவிகடன், தீபம், கல்கி, மல்லிகை, குங்குமம், சிவதொண்டன், தீபாவளி மலர்கள் போன்றன விற்பனைக்குண்டு. 16-09-2005 தொடக்கம் 20.09.2005 வரை.*

தொடர்பு:-
**திருமதி சி.பாலசுந்தரம்,**
இல.20, குறோசெற் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
(40047)(38-15-17)




கடந்த மாதம் 19ம், மற்றும் இம்மாதம் 10ம் திகதி வகுப்புகளில் கலந்துகொண்டோருக்கான

## இரண்டாவது இலவச நேரடி வகுப்பு

இடம : **யாழ் ரிம்மர் மண்டபம்** (யாழ் மத்திய கல்லூரி அருகில்)
காலம : **இன்று 17.09.2005 (சனிக்கிழமை)**
நேரம் : **9.00-11.00,11.00-1.00, 2.00-4.00,4.00-6.00**
(விரும்பிய ஒரு நேரத்தில் கலந்து கொள்ளலாம்.)

...தில் 13 முதல் 24வது அலகுகள் இலவசமாக வழங்கப்படும்

**...யவர்களும் கலந்து இலவசமாக பதியலாம்**

வகுப்புப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு : 021 - 4591571

**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna**

# அஞ்சலி நிகழ்வு



கடந்த 26-08-2005 இல் பிரான்ஸ் நாட்டில் விபத்தில் சிக்கி உயிரிழந்த ஜோண்சன் எமது மன்றத்தின் அர்ப்பணிப்பு மிக்க அங்கத்தவனாகப் பணியாற்றியதுடன், கடந்த 11 வருடங்களாக எமது திருப்பாடுகளின் நாடகங்களில் பிரதான பாத்திரமாகிய இயேசு பாத்திரத்தை ஏற்று நடித்த கலைஞனுமாகிய,

## ஸ்ரீபன் ஜோண்சன் பிரேமானந்த்

அவர்களின்
வாழ்வுக்கும், பணிக்கும் நன்றி செலுத்தி இன்று (17-09-2005) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு எமது மன்ற அரங்கில் இடம்பெறவுள்ள இரங்கல் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் பங்குபற்றி மறைந்த கலைஞனின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்குமாறு எமது அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

238,பிரதானவீதி,
யாழ்ப்பாணம். (சீ/45148)(32-15-17)
**திருமறைக் கலாமன்றம்.**

## வீடமைப்புக் கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேசத்தில் உலக வங்கியினால் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்களின் பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 330 பயனாளிகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் -

மேலும் 19 பயனாளிகளின் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் யாழ்.செயலகத்திலிருந்து கிடைத்ததும் வழங்கப்படவுள்ளதாகவும் - பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர். (ஒ-117)

# சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சமாச வங்கிக்கிளை முல்லைத்தீவில்

புதுக்குடியிருப்பு,செப்17

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வங்கிக் கிளை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சமாசத் தலைவர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் இ.பிறையாளன் ஏற்றினார். கூட்டுறவுக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் சி.மொ.சிவமயம் ஏற்றினார்.

பெயர்ப் பலகைத் திரையை நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சி.வேதவனம் நீக்கிவைத்தார்.

கட்டடத்தின் முதலாவது தொகுதியை மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர் நாடா வெட்டித் திறந்துவைத்தார். இரண்டாவது கட்டடத் தொகுதியை முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி திறந்துவைத்தார்.

வங்கி நடவடிக்கைகளை பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.தியாகராசா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (9-353-202)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் மூல்

# செக்காலை காட்டு வீதியில் பீதியுடன் பயணிக்கும் மக்கள்

வெள்ளாங்குளம்,செப்.17

செக்காலை, அரசபுரம் கிராமத்தில் ஐயனார் கோயிலிலிருந்து மன்னார் வீதிவரை காடுகள் அடர்ந்து காணப்படுகின்றன. இதனால், இக்கிராம மக்கள் அப்பாதையூடாகப் பெரும் சிரமத்துடன் பயணஞ்செய்கின்றனர்.

சுமார் 4 கிலோமீற்றர் தூரமுடைய இப் பாதையில் காடுகள் அடர்ந்து காணப்படுகின்றன. இப்பாதையில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பொதுமக்கள் அனைவரும் தினமும் பயணிக்கின்றனர். யானைகள் நிறைந்த இக் காட்டு வழியிலே பொதுமக்கள் பயணஞ் செய்யும்போது பெரும் பீதியுடனேயே செல்லவேண்டியுள்ளது. இப்பாதையைச் சீர் செய்து பஸ்சேவை ஒன்றை நடத்துவது அவசியம் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(9-415-202)



செக்காலை, அரசபுரம் கிராம மாணவர்கள் காடுகள் அடர்ந்த பாதையூடாகக் கால்நடையில் செல்வதைப் படத்தில் காணலாம்.

(படம் : ச.உதயன், வெள்ளாங்குளம் செய்தியாளர்)


# மல்லாவியில் சுகாதார மேம்பாடு

புளியங்குளம்,செப்.17

தமிழீழ சுகாதார சேவைகள் அமைப்பு மல்லாவி நகரின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் கடந்த வாரம் மல்லாவி சந்தை மற்றும் நகர வர்த்தக நிலையங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழீழ சுகாதார சேவையினரும் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து சுகாதார விழிப்புணர்வுக் கருத்துரைகளை வர்த்தகர்களுக்கு வழங்கினர். (9-355-202)



புளியம்பொக்கணை, நவஜீவனம் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் இ.ராசன் நாடா வெட்டி கண்காட்சி மண்டபத்தைத் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் -

சிறார்களின் ஆக்கப்பொருள்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# பூநகரியில் சிறப்புற இடம்பெற்ற 83ஆவது: கூட்டுறவாளர் தினவிழா

ஜெயபுரம்,செப்.17

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்திய 83ஆவது கூட்டுறவாளர் தினவிழா அண்மையில் பூநகரி வாடியடியில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், தமிழீழ நிர்வாக சேவை உதவிப் பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன், தமிழீழ நிர்வாக சேவையின் கிளிநோச்சி மாவட்டப் பொறுப்பாளர் இசையமுதன், இணைப்பாளர் மயூரன், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கந்தசாமி, கடற்புலிகளின் அரசியல்துறை பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் அறிவமுதன், பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(9-291-202)

# ச.ச.நிலையங்களுக்கான போட்டி

தென்மராட்சி,செப்.17

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினால் சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கெருடாவில் திருக்குமரன் சனசமூக நிலையம் முதலிடத்தையும், கற்குளி பாரதி சனசமூக நிலையம் இரண்டாமிடத்தையும், நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையம் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன. சிறந்த செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் வினாக் கொத்துக்கள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் இத்தெரிவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31-117)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால்

# புனரமைக்கப்பட்ட கிராமம் பொதுமக்களிடம் கையளிப்பு

கரவட்டி,செப்.17

கரவெட்டி துன்னாலை கிழக்கு ஆட்டுப்பட்டிக் கிராமம் புனரமைக்கப்பட்டு கடந்த புதன்கிழமை பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 'நிக்கொட்' சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இக்கிராமம் புனரமைக்கப்பட்டது.




இதற்கான நிகழ்வில் 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் த.லங்காநேசன் வைபவ ரீதியாகக் கிராமத்தைத் திறந்துவைத்தார்.

யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

கிராமத்தின் கல்வெட்டை 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் திரைநீக்கம் செய்துவைத்தார். கிராமத்தைக் கையளிக்கும் சான்றிதழைக் கரவெட்டிப் பிரதேச செயலர் சத்தியசீலன், கிராம புனரமைப்புக் குழுத் தலைவர் சிவலிங்கத்திடம் கையளித்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. ஆசியுரையை யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா வழங்கினார். சிறப்புரைகளைப் பிரதேச செயலர், யாழ். மாவட்ட 'நிக்கொட்' உதவித் திட்டப் பணிப்பாளர் நவரட்ணராஜா, தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட 'நிக்கொட்' திட்ட இணைப்பாளர் கதிர்காமத்தம்பி ஆகியோர் நிகழ்த்தினர். பிரதம விருந்தினர் உரையைத் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கிராமச் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கிராம மக்களும் கலந்துகொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் அரியாலை மத்தி, தாவளை, இயற்றாலை, வசந்தபுரம், பொம்மைவெளி, எழுவைதீவு ஆகிய கிராமங்கள் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-70)

# உடுவில் நூலகத்திற்குப் புதிய கட்டடம்

வலி.தெற்கு,செப்.17

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கிவரும் உடுவில் உப அலுவலகத்துக்கான நூலகக் கட்டடத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கை பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நூலகத்தில் மாணவர் பகுதி, சிறுவர் பகுதி, வாசிப்புப் பகுதி, உடனுதவும் பகுதி ஆகியவை ஒரு சிறிய கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அதனால், வாசகர்கள், சிறுவர்கள், மாணவர்கள் போன்றவர்கள் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இக்குறைபாடுகளை நூலக அபிவிருத்திக் குழுவினரும் பொதுமக்களும் பிரதேச சபையினரிடம் சுட்டிக்காட்டினர்.

மாணவர்களின் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்த பிரதேச சபையினர் நூலகக் கட்டடத்தை விஸ்தரித்து வாசகர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி நூலகக் கட்டட விஸ்தரிப்பிற்கான புதிய கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் கட்டடத்திற்கான அடிக்கல்லை வைபவ ரீதியாக நட்டுவைத்தார். (ஒ-152)

# மயிலணியில் பாடசாலை நூலகம்

வலி.தெற்கு,செப்.17

மயிலணி சைவ மகா வித்தியாலய மாணவர்களின் பாவனைக்கென பாடசாலை நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி நூலகத்தினை உடுவில் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

# வலி.தெற்கில் கலாசார விழா

வலி.தெற்கு,செப்.17

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கலாசார விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உள்நாட்டு கலைஞர்களை ஊக்குவிக்கும் ஒரு களமாக நடத்தப்படவுள்ள இக்கலை விழாவின்போது கலாசார பேரவையினரால் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(ஒ-152)



ஆட்டுப்பட்டிக் கிராமக் கையளிப்பு நிகழ்வில் நிக்கொட் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் த.லங்காநேசன் நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்வதையும் கிராமக் கையளிப்புக்கான சான்றிதழை கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கிராமத் தலைவர் எஸ்.சிவலிங்கத்திடம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சி.சுந்தரலிங்கம்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மக்கள் வங்கியின்
பிராந்திய முகாமையாளராகப்
பதவி உயர்வு பெற்ற

உயர்திரு.
**துரைசிங்கம் ரகு**
அவர்கள்



காலத்தின் தேவை அறிந்து
வாடிக்கையாளர்களின் கருத்தை
கவனத்திற்கொண்டு செயற்பட்டு
மக்களுக்குரிய சேவையை மனம் கொண்டு
அயராது ஆற்றினார்.
அதற்கான பரிசிலாகப் பதவியுயர்வு பெற்றுள்ள
பிராந்திய முகாமையாளரைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கொய்ன்ஸ் ஸ்ரார்**
303, காலி வீதி,
வெள்ளவத்தை
T.P.: 0773203344

**லிங்கம் உணவகம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.
T.P.: 0776005749

**ஈசன் களஞ்சியம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.
T.P.: 0773068974

(தி/45135) (24-14-19-26)



## அவசர பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அங்கத்தவர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை 18-09-2005 காலை 9.00 மணிக்கு சங்கக்காரியாலயத்தில் இடம்பெறும். தவறாது சமுகந்தரவும்.

செயலாளர்
**இந்து இளைஞர் சங்கம்,**
**தெல்லிப்பழை.**

(40078)(26-14-19)



## பிற்போடப்பட்டுள்ளது

வடமராட்சி நெல்லியடி கிழக்கு புதுத்தோட்ட விநாயகர் ஆலயத்திருப்பணி நிதிக்காக இன்று (17.09.2005) நெல்லியடி திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருந்த இன்னிசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். இந்நிகழ்ச்சி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**-ஆலய பரிபாலன சபை.**

(40037)(26-14-19)



## வழிகாட்டற் கருத்தரங்கு

எமது நிறுவனம் அனேக பெற்றோர் களினதும் மாணவர்களினதும் வேண்டு கோளுக்கிணங்க A/L 2005 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் மாணவர் களுக்கான சிறந்த ஒரு உயர்கல்வியை மேற்கொள்வதற்கான வழிகாட்டற் கருத்தரங்கு ஒன்றினை பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் என ஒருங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் 18.09.2005 ஞாயிற்றுக் கிழமை பகல் 10.00 மணிக்கு IIS City Campus இனால் இல. 100, மணிக் கூட்டு வீதியில் அமைந்துள்ள IIS பிரதான மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உங்களது பரீட்சைப் பெறுபேறுகளுடன் உயர்கல்வி தொடர்பாக சிந்தித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக அமையுமென எதிர்பார்க்கிறோம்.

அனைவரும் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P. No.: 021 222 8060


## 'ஹன்டர்'தீக்கிரை

தென்மராட்சி,செப்.17

சாவகச்சேரி மண்டுவில் சோலையம்மன் கோயில் வீதியில் கடந்த செவ்வாய்க் கிழமை 'ஹன்டர்' வாகனம் ஒன்று தீக் கிரையானது.

வாகனம் முழுமையாக எரிந்த நிலையில் காணப்பட்டது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த வாகனமே இனந் தெரியாதோரால் தீயிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

(9-117)

## பௌர்ணமி தின நாதோபாஸனம்

யாழ்ப்பாணம்,செப்.17

இணுவையூர் மா.த.ந.வீரமணி ஐயரின் பௌர்ணமி தின நாதோபாஸன ஆராதனை இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மகாவித்துவான் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நீதிவான் ஏகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பாட்டுக் கச்சேரிகள் இடம்பெறும்.

அருணந்தி ஆரூரனின் பாட்டுக் கச்சேரியில், வயலின் எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் வி.ரமணா, முகர்சிங் கே. நந்தகுமார் ஆகியோர் அணி செய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

எஸ்.கணபதிப் பிள்ளையின் பாட்டுக் கச்சேரியில் வயலின் எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் எம்.சிதம்பரநாதன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.(9-204)

## மரண அறிவித்தல்



### பண்டா றிச்சேட்

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி)

தம்மளை, அளவெட்டி மேற்கைச் சேர்ந்த றிச்சேட் அவர்கள் 13.09.2005 அன்று இரவு கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பண்டா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், ஜோய்ஸ் நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும் றூபன், றஞ்சனா (கனடா), நேசன் (சுவிஸ்), றாஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் மொனிக்கா (சுவிஸ்), பத்மநாதன் (ஜெகன் - கனடா), நவா (சுவிஸ்), அஜித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுரா (கனடா), மோவிதன் (கனடா) ஆகியோரின் பேரனும் லீலாவதி, காலஞ்சென்ற சோமாவதி மற்றும் எட்வின், கருணா, றெஜி, சுமணாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை ஞாயிற்றுக்கிழமை 18.09.2005 அன்று மாலை 3 மணிக்கு (பு.நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, அளவெட்டி தென்னிந்தியத் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஜோய் இல்லம்'
தம்மளை,
அளவெட்டி.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(40040)(26-14-19)


## நல்லூர் லயன்ஸ் கழகம்
## தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்
### தொழில்சார் பயிற்சிப்பட்டறை-2005

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இயங்கும் சேவைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்பம், மற்றும் தலைமைத்துவம் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நல்லூர் லயன்ஸ் கழகம் யா/ மத்திய கல்லூரி, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை லியோகழகங்களின் உதவியுடன் பயிற்சிப்பட்டறை ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. பயிற்சிப்பட்டறையில் பங்குகொள்ளும் மாணவர்களின் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. உங்கள் பதிவுகளை பாடசாலை ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளவும். இதுவரை பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய மாணவர்கள் நேரடியாக 19ம் திகதி காலை 8.30 மணிக்கு யா/ மத்திய கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**இடம் : யா/மத்திய கல்லூரி மண்டபம்**
**காலம் : 19.09.2005 தொடக்கம் 23.09.2005 வரை**
**09.00 மணி முதல் 04.00 மணி வரை**

தகவல் தொழில்நுட்பத்திலும் முகாமைத்துவத்திலும் அனுபவமிக்க தொழில்சார் வல்லுநர்களின் உதவியுடன் இப்பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளதால் மாணவர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

- வயதெல்லை : 14 – 19
- பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு :- தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்
IIS CITY CAMPUS
# 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 8060





விளம்பர அனுசரணை
உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க வைர நகைகளைப் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**சாரங்கா நகைமாடம்**
177/4. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2480



*மீண்டும்*
*ஓர் அரிய வாய்ப்பு*
## பகுதிநேர வேலை வாய்ப்பு

சிங்கப்பூரில் கல்விகற்றிட யாழ். மாணவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
இன்றே இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்.
எமது நிறுவனத்தினால் ஏற்கனவே பல மாணவர்கள் சிங்கப்பூர் அழைத்துச் செல்லப்பட்டு தொழில்வாய்ப்புடன் கல்வியைக்கற்று வருகின்றார்கள்.
இன்று உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளால் ஏமாற்றமடைந்து உள்ளீர்களா? **இதோ கவலையை விடுங்கள்.**
எம்முடன் இன்றே இணையுங்கள். சிங்கப்பூர் சென்று உயர்கல்வியைக் கற்று ஐரோப்பிய நாடுகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடருங்கள். வாழ்வை வளமாக்குங்கள்.

முகவர் யாழ்ப்பாணத்தில்:
தொடர்புகொள்ள வேண்டிய விபரம்:

**Room No.86,**
**392, A.S.N. Lodge**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
077-6127343, 0777 426 412

**Courses of Brighton School**
1. G.C.E. (N) Level
2. G.C.E. (O) Level
3. G.C.E. (A) Level
SAT
Enrichment Courses

**UNIVERSITY OF SOUTHERN QUEENSLAND**
**UNIPREP PROGRAMME**

(40032) (50)

# ஸ்ரீல.சு.கவின் கொள்கைகளுக்கு மாறான முடிவுகளுக்கு இடமளிக்கப்படவேமாட்டாது!

## அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி



நியூயோர்க், செப்.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு முரணான வகையில் எடுக்கப்பட்டுள்ள எந்தவொரு முடிவையும் நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நாடு திரும்பியவுடன் அது தொடர்பிலான உரிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

-இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு ஆசிய சமூகக் கூட்டத்தில் உரையாற்றிய பின்னர் அமெரிக்காவில் வாழும் சிங்கள மக்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தார். அப்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு ஜனாதிபதி தெரிவித்த கருத்துகளின் சாராம்சம் வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு அமையவே செயற்படுவதற்கு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமாகிய மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த கோட்பாடுகளைத் தாண்டி மஹிந்தவோ அல்லது கட்சியின் வேறு எவருமோ சென்றுவிட முடியாது.

கட்சியின் கொள்கைகளுக்கு அப்பால் எந்தத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் இலங்கைக்கு சென்றவுடன் அவற்றைச் சரி செய்வேன். அவற்றிற்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுப்பேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஓர் இனவாதக் கட்சியல்ல. இனவாதக் கட்சியாக அதனை மாற்றவும் முடியாது- இவ்வாறு ஜனாதிபதி மேலும் கூறியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாக ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செய்துகொண்டுள்ள உடன்பாடுகளினால் சீற்றமடைந்துள்ள ஜனாதிபதி குமாரதுங்க, நாடு திரும்பியதும் அது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது. (க-3)

## தேடப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை சரணடைந்தார்

கொழும்பு, செப்.17

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாகத் தேடப்பட்டவந்த பிரித்தானிய பிரஜையான மைக்கல் ஸ்மித் புதனன்று பொலீஸாரிடம் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த அவரை நேற்றுமுன்தினம் பொலீஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இவர் கொழும்பிலுள்ள பொலீஸ் தலைமையகத்தில் சரணடைந்தார்.

சரணடைந்த இவரை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைக்காக பொலீஸார் ஒப்படைத்தனர்.

இவர் சிலாபம், மன்னார் பகுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவரைக் கைதுசெய்வதற்காகத் தேடிச் சென்ற மூன்று பொலீஸாரே விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-3)

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றம் நிச்சயம்

கொழும்பு, செப்.17

தற்போது அமெரிக்காவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பிய பின்னர் அமைச்சரவையில் மாற்றங்களை செய்வாரென நம்பகரமாக அறியமுடிகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெற வேண்டுமென்று ஜனாதிபதி கருதுகிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது பிரதமர் பதவி உட்பட பல முக்கியமான அமைச்சுப் பதவிகள் மாற்றங்களுக்கு உள்ளாகலாமென ஊகிக்கப்படுகிறது.

தற்போது எழுந்துள்ள பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் இந்த மாற்றம் குறித்தான செய்திகளால் முக்கிய அமைச்சர்கள் சிலர் கலங்கிப் போயிருக்கின்றனர் எனவும் தெரியவருகிறது. (க-3)

# ஆயுதங்களை வைத்திருக்கும் வரைதான் புலிகளின் தலைவர் பிரபாவுக்குப் பாதுகாப்பு

### வன்முறைகளற்ற விடுதலைப் பாதையில் ஜே.வி.பி. அமைப்பு கருத்து

கொழும்பு, செப்.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கைகளில் ஆயுதம் இருக்கவேண்டும். அவரது கைகளில் ஆயுதம் இருக்கும் வரைதான் அவருக்குப் பாதுகாப்பு. இல்லையேல் அவரது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடலாம் என்று கூறுகின்றார் 'ஜே.வி.பி. ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும், வன்முறைகள் அற்ற விடுதலைப்பாதையில் ஜே.வி.பி.' என்ற அமைப்பின் தேசிய மற்றும் சர்வதேச அமைப்பாளருமான டாக்டர் சுபாஸ் சந்திர பெர்னாண்டோ. கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதங்களைக் கொண்டோ இராணுவ பலத்தைக் கொண்டோ இங்கு ஏற்பட்டிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. ஆயுதப் போராட்டத்தை நடத்திப் பின்னர் அதனைக் கைவிட்ட அனுபவம் எமக்கு உண்டு.

ஆனால், புலிகளின் நிலை அப்படியல்ல. இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இன மக்களும் பெருபான்மை இனத்தவர்களான சிங்களவர்களுக்கு சமமாக வாழக் கூடியநிலை ஏற்படுத்தப்படவேண்டும். அனைத்து இன மக்களினதும் அடிப்படை உரிமைகளும், மத, மொழி, கலாசார பண்பாட்டு உரிமைகளும் சட்டரீதியாக ஊர்ஜிதப்படுத்தப்படவேண்டும். இதனை யுத்தத்தின் மூலம் ஒருபோதும் ஏற்படுத்தமுடியாது.

பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீல.சு. கட்சித் தலைவி சந்திரிகா குமாரதுங்கவும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்துவதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்தமுடியும் 'வன்முறைகள் அந்த விடுதலைப் பாதையில் ஜே.வி.பி.' என்ற எமது அமைப்பின் நோக்கமும் இதுவே.

பேச்சு மேசைக்கு வரும் முன்னர் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. பிரபாகரன் ஆயுதங்களுடன் இருக்கும் வரைதான் அவருக்குப் பாதுகாப்பு. அவர் ஆயுதங்களுடன் பேச்சு மேசைக்கு வரட்டும். ஆனால், அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்பதே பிரபாகரனுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள். நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்குப் பேச்சுகள் ஒன்றே வழி. இதனை வலியுறுத்தி நாம் வடக்கு - கிழக்கு உட்பட எல்லா இடங்களிலும் பிரசாரம் செய்யத்திட்டமிட்டுள்ளோம். நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது ஸ்ரீல.சு.கட்சிக்கோ எதிரானவர்களும் அல்லர்; ஆதரவானவர்களும் அல்லர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கமும் எமக்கில்லை. உண்மையான ஜே.வி.பியின் நோக்கம் என்ன என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதே எமது லட்சியம். ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவும், மஹிந்த ராஜபக்ஷவும் அவர்களுடைய மேடைகளில் எமக்குக் களம் அமைத்துக் கொடுத்தால் அம்மேடைகளிலேயே நிரந்தர சமாதானத்திற்கு உண்மையான ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன என்பதை பகிரங்கமாகக் கூறத் தயாராக இருக்கின்றோம். - என்றும் டாக் டர் சுபாஸ் சந்திர பெர்னாண்டோ கூறினார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அமைப்பின் பதில் செயலாளர் வீரசேன பல்லியகுரு மற்றும் அமைப்பாளர்களான வன்சவனிசசேகர, விக்கிரமபாகு சொய்ஸா ஆகியோரும் கலந்துகொண்டனர். (க-3)

## பிரதமர் செய்த ஒப்பந்தங்களை சுதந்திரக் கட்சி பரிசீலிக்கும்

### *அமெரிக்காவிலிருந்து அநுரா தகவல்*



கொழும்பு, செப்.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ சிலகட்சிகளுடனும் சில குழுக்களுடனும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சுதந்திரக் கட்சி மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது என வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்திருக்கிறார். அந்த ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து நேற்றுமுன்தினம் அறிக்கையொன்றை விடுத்திருக்கும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது:-

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் சகிதம் வெளிநாட்டமைச்சர் என்ற ரீதியில் நான் கலந்துகொண்டுள்ளேன்.

நான் கூறாத விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் நான் ஆதரவு வழங்காதிருக்கத் தீர்மானித்துள்ளேன் எனக் கொழும்பில் உள்ள ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் குறித்து எனது கவனம் திரும்பியுள்ளது. ஜனாதிபதியுடன் நடத்திய நீண்ட ஆழமான பேச்சுக்களின் பின்னர், பிரதமர் மஹிந்த சில கட்சிகளுடனும் குழுக்களுடனும் செய்து கொண்டுள்ள இணக்கப்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உன்னிப்பாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற ஜனாதிபதியின் யோசனைக்கு நான் இணக்கம் தெரிவித்தேன்.

அந்த இணக்கப்பாடுகள் கட்சிக்கும் மக்களுக்கும் நன்மை தருமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானிக்குமானால் நான் நாடு திரும்பியவுடன் எனது முழுமையான ஆதரவை மஹிந்தவுக்கு வழங்கித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவேன். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (க-3)

## முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர் பிரதமர் மஹிந்தவுக்கு முழுமையான ஆதரவு?

### மூன்று அமைச்சர்களும் பிரதமருடன் நேரில் சந்திப்பு

கொழும்பு, செப்.17

ஸ்ரீல.மு.காங்கிரஸ் மாற்றுக் குழுவினர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீல.சு. கட்சி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாற்றுக் குழுவைச் சேர்ந்த அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ மஜீத், அமீர் அலி ஆகியோர் பிரதமரைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்தனர் என்று அறியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அமைச்சர்களாக இருந்துகொண்டு பிரதமரைத் தவிர வேறு யாருக்கும் ஆதரவு வழங்கவோ அல்லது பிரசாரம் செய்யவோ முடியாத இக்கட்டான நிலைக்கு இந்த அமைச்சர்கள் மூவரும் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனாலேயே இவர்கள் பிரதமருக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக அமைச்சர் அமீர் அலியுடன் தொடர்பு கொண்டபோது அவர் கூறியதாவது:-

"மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டோம்.

"அலவி மௌலானா தலைமையில் நாட்டின் பல பாகங்களில் இருந்துவந்த முஸ்லிம் பெரியார்களும், புத்திஜீவிகளும் இதில் கலந்துகொண்டனர். சுமார் ஆயிரம் பேர்வரை கலந்துகொண்ட இக்கூட்டத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் என்ற வகையில் நாங்களும் பங்குபற்றினோம். பிரதமருடனும் உரையாடினோம்.

"ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் பிரதமருக்கு ஆதரவளிப்பதாக உறுதியளிக்கவில்லை. நாங்கள் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. கூடிய விரைவில் எமது முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம்."- என அமைச்சர் அமீர் அலி கூறினார். (க-3)

## வரவு – செலவுத் திட்ட எல்லைகளை மீறிப் போகிறது நிதி நிலைவரம்

### *எச்சரிக்கிறது சர்வதேச நாணய நிதியம்*

இலங்கை அரசு, வரவு - செலவுத் திட்ட மானியங்கள் எல்லை மீறிவிட்டதால் அவற்றை வெட்டுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் நிலைமை மோசமாகும். இப்படி அரசை எச்சரித்திருக்கிறது சர்வதேச நாணய நிதியம்.

இலங்கையின் பொருளாதாரம் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் சர்வதேச நாணய நிதியம், எரிபொருள் உட்பட பொருளாதாரத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மானியங்களை விரைந்து குறைக்க வேண்டியதன் அவசரத்தையும் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இவ்வருடம் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தை சேகரிக்கத் தவறியுள்ள அரசு மானியங்களுக்காகக் கூடுதல் நிதியை செலவிட்டுள்ளது. ஆழிப்பேரலை நிவாரணத்திற்காக 2 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள அதேசமயம், வரவு - செலவுத் திட்ட இலக்குகளை மீறி எரிபொருள்களுக்கான மானியமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதித்துண்டுவிழும் தொகை வரவு - செலவுத் திட்ட எல்லைகளை விஞ்சியிருக்கிறது. மத்திய வங்கி குறிப்பிடத்தக்களவு நிதியை அரசுக்கு வழங்கியதால் பணவீக்கம் அதிகரித்துள்ளதுடன் திரழ்வுப் பொருளாதார வீதமும் அதிகரித்துள்ளது.

நிதி இலக்குகளை அடைய வேண்டுமாயின் மேலதிக நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டும். உள்ளூர் எரிபொருள் விலைகளில் திருத்தங்கள் உட்பட பல நடவடிக்கைகளை எடுக்கலாம்.

-இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-3)

## இரத்ததானம் பாதுகாப்பானது

- இரத்ததானத்தின் முன், இரத்தம் வழங்குவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள், நோய்கள் இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும்.
- பின்னர் நாடித்துடிப்பு, குருதி அமுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும்.
- குருதி கொடையாளர்களின் உடல் நிறையும் குருதிச்செறிவும் அளக்கப்படும்.
- உணவு, நீராகாரம் உட்கொண்ட விவரம் கேட்டு அறியப்படும்.
- உடலில் உள்ள குருதியில் 10 % குருதியே பெற்றுக் கொள்ளப்படும்.
- குருதி வழங்கலின் பின்னர் சிறிதுநேர ஓய்வும் நீர் ஆகாரமும் வழங்கப்படும்.
- குருதி வழங்கலுக்குப் பின்னர் கடைப்பிடிக்க வேண்டியவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

**இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



## ஆசீர்வாதம் தோமஸ்

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஆசீர்வாதம் தோமஸ் அவர்கள் 12.09.2005 திங்கட்கிழமை தென் இந்தியாவில் காலமானார்.

அன்னார் எலிசபேத்தின் (மலர்) அன்புக் கணவரும் விஜயன், சந்திரன், மரீனா, செச்சில், ரஜனா, சுவாந்தன், அனிற்றா (வடிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.09.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதித் திருப்பலிக்காக மெலிஞ்சிமுனை பரலோகராசா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் நல்லடக்கம் மெலிஞ்சிமுனை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச.சவிரியான் *(சகலன்)*.

மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை.

(40026)(16-33)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்கு மன்னார் உதவி அரச அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் எஞ்சிய பெயர்களும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களும் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

| | |
|---|---|
| ம/ 253 | திரு. அந்தோனி கிரகோரிகுரூஸ் |
| ம/ 262 | திரு. காசிநாதர் கார்த்தியேசு |
| ம/ 279 | திரு. நல்லையா சச்சிதானந்தம் |
| ம/ 280 | திரு. நவரத்தினம் குலசேகரம் |
| ம/ 312 | திரு. யோசப் லோகநாதன் |
| ம/ 315 | திரு. பொன்னுத்துரை யேசுராசா |
| ம/ 338 | திரு. சூசையப்பு ஸ்ரான்லி லியோன் |
| ம/ 375 | திரு. சூசைப்பிள்ளை திருநாவுக்கரசு |
| ம/ 392 | திரு. சின்னையா தவராசசிங்கம் |
| ம/ 429 | திரு. சுவாந்து செபஸ்தியான் |
| ம/ 455 | திரு. செபமாலை அந்தோனிப்பிள்ளை |
| ம/ 472 | திரு. மரிசலின் ஜோஜ்குமார் |
| ம/ 480 | திரு. குமாரவேல் ஆனந்தன் |
| ம/ 496 | திரு. சுவாணி சந்தான் |
| ம/ 501 | திரு. கபிரியன் அந்தோனிஜயா |
| ம/ 523 | திரு. சீமான் அந்தோனிமுத்து |
| ம/ 567 | திரு. தாமோதரம்பிள்ளை தருமலிங்கம் |
| ம/ 569 | திரு. சந்திரசேகரம் இராசசிங்கம் |
| ம/ 570 | திரு. அந்தோனிமுறாள் ஆசீர்வாதம் |
| ம/ 590 | திரு. பிலிப்பு ஜெயசீலன்டபரேரா |
| ம/ 596 | திரு. சூசை சந்தியோகுசம்பாய்வ |
| ம/ 612 | திரு. மாதடிமை சூசை |
| ம/ 724 | திருமதி. ராஜலட்சுமி தட்சணாமூர்த்திசர்மா |

**முல்லைத்தீவு மாவட்டம்**

**மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்**

| | |
|---|---|
| மு/ 73 | திரு. சின்னத்துரை தாமோதரம்பிள்ளை |
| மு/ 79 | திருமதி. விஜயம் விக்னேஸ்வரமூர்த்தி |
| மு/ 91 | திரு. முத்தையா சுப்பிரமணியம் |
| மு/ 93 | திரு. விஸ்வநாதன் ருத்திராவிஜயநாதன் |
| மு/ 118 | திருமதி. முத்து பரமநாதன் |
| மு/ 135 | திரு. பீதாம்பரம் நித்தியானந்தசிவம் |
| மு/ 152 | திரு. தம்பியையா வேலுப்பிள்ளை |
| மு/ 158 | திரு. நல்லதம்பி குமாரசாமி |
| மு/ 163 | திரு. செல்லையா சுப்பிரமணியம் |
| மு/ 189 | திரு. முத்தையா திருநாவுக்கரசு |
| மு/ 194 | திரு. முருகேசு வைத்திலிங்கம் |
| மு/ 232 | திரு. சின்னத்துரை தர்மலிங்கம் |
| மு/ 235 | திரு. கந்தையா தம்பிஜயா |
| மு/ 237 | திரு. நாகலிங்கம் துரைசிங்கம் |
| மு/ 247 | திருமதி. தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| மு/ 286 | திரு. இளையதம்பி தங்கராசா |
| மு/ 293 | திரு. முருகேசு தம்பிராசா |
| மு/ 299 | திரு. சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் |
| மு/ 300 | திரு. தம்பிப்பிள்ளை சிவசண்முகநாதன் |
| மு/ 304 | திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை |
| மு/ 305 | திருமதி. தங்கம்மா சுப்பிரமணியம் |
| மு/ 319 | திரு. விசுவலிங்கம் சுப்பையா |
| மு/ 321 | திரு. வைத்திலிங்கம் தெய்வேந்திரம் |
| மு/ 334 | திரு. ஆறுமுகம் ஐயாத்துரை |
| மு/ 357 | திரு. சின்னப்பிள்ளை பேரம்பலம் |
| மு/ 366 | திரு. வேதாரணியம் கனகையா |
| மு/ 420 | திரு. பொன்னன் நல்லதம்பி |
| மு/ 481 | திரு. சின்னையா ஞானசேகரம் |
| மு/ 485 | திருமதி. சீதேவி அம்பலவாணர் |
| மு/ 503 | திரு. செல்லப்பா செல்வரத்தினம் |
| மு/ 509 | திரு. சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளை |
| மு/ 510 | திரு. ஞானப்பிரகாசம் சிறில் |
| மு/ 550 | திரு. சின்னத்துரை துரைராசா |
| மு/ 628 | திரு. சூசை அந்தோனிமுத்து |
| மு/ 639 | திரு. கந்தையா பரராசசிங்கம் |
| மு/ 646 | திரு. மத்தியாஸ் அலேஸ் |
| மு/ 648 | திரு. சின்னையா நாகரத்தினம் |
| மு/ 682 | திரு. இறப்பியல் அன்ரனி அமிர்தநாயகம் |
| மு/ 698 | திரு. பனாந்து அருளானந்தம் |
| மு/ 735 | திருமதி. இராசம்மா விநாசித்தம்பி |
| மு/ 739 | திரு. கந்தையா முத்தையா |
| மு/ 802 | திருமதி. பராசக்தி விக்கினேசுபரர் |
| மு/ 805 | திரு. செல்லையா பொன்னம்பலம் |
| மு/ 807 | திருமதி. கமலா சிவசிதம்பரம் |
| மு/ 809 | திரு. தனுஸ்கோடி முத்துக்குமாரு |
| மு/ 812 | திரு. சின்னையா சண்முகநாதன் |
| மு/ 819 | திரு. மினாசி செல்லப்பா |
| மு/ 828 | திரு. கந்தையா கெங்காதரம் |
| மு/ 829 | திரு. கந்தையா இராதாகிருஷ்ணன் |
| மு/ 833 | திரு. கணபதிப்பிள்ளை கனகசிங்கம் |
| மு/ 868 | திருமதி. இலட்சுமி சிவஞானம் |
| மு/ 882 | திருமதி. ஜெயராணி அன்ரனி |
| மு/ 918 | திரு. வேலுப்பிள்ளை இளையதம்பி |
| மு/ 930 | திரு. ஜெறிமையா பத்மநாதன் |
| மு/ 934 | திருமதி. பாக்கியம் தங்கராசா |
| மு/ 963 | திரு. வேலுப்பிள்ளை செல்லையா |
| மு/ 977 | திரு. ஆறுமுகம் இரத்தினம் |
| மு/ 978 | திரு. ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| மு/ 982 | திரு. கயிலன் வீரகத்தி |
| மு/ 1021 | திரு. வல்லிபுரம் அன்னலிங்கம் |
| மு/ 1056 | திரு. கந்தையா சண்முகம் |
| மு/ 1060 | திருமதி. தவமணிதேவி சிவப்பிரகாசம் |
| மு/ 1113 | திரு. சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் |
| மு/ 1146 | திரு. கந்தவனம் நடராசா |
| மு/ 1147 | திரு. யோசேப் தாமோதரம்பிள்ளை |
| மு/ 1166 | திரு. யோசேப் அருளப்பு |
| மு/ 1190 | திரு. இராமலிங்கஐயர் அருளானந்தக்குருக்கள் |
| மு/ 1203 | திரு. நவரத்தினம் செல்வராசா |
| மு/ 1209 | திரு. சுப்பிரமணியம் செல்வராசா |
| மு/ 1265 | திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம் |
| மு/ 1272 | திருமதி. முத்தம்மா சரவணமுத்து |
| மு/ 1274 | திரு. சவரிமுத்து அன்ரன்பிறிற்றோ |
| மு/ 1279 | திரு. சின்னப்பு கந்தப்பிள்ளை |
| மு/ 1286 | திரு. சின்னப்பிள்ளை சிவகுரு |
| மு/ 1326 | திரு. நல்லதம்பி இராசதுரை |
| மு/ 1351 | திரு. கயிலாயபிள்ளை குணலிங்கம் |
| மு/ 1352 | திரு. தங்கராசா மகாலிங்கம் |
| மு/ 1367 | திரு. கிரிபண்டா சைமன் |
| மு/ 1434 | திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம் |
| மு/ 1509 | திரு. ஆழ்வாப்பிள்ளை சச்சிதானந்தம் |
| மு/ 1544 | திரு. கந்தையாபிள்ளை விஸ்வலிங்கம் |

**குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்**

| | |
|---|---|
| மு/ 44 | திரு. பிச்சைக்காரன் ஆறுமுகம் |
| மு/ 68 | திரு. முருகுப்பிள்ளை தர்மலிங்கம் |
| மு/ 109 | திரு. கனகசபை அருளானந்தம் |
| மு/ 125 | திரு. இராமலிங்கம் பொன்னையா |
| மு/ 165 | திரு. மாணிக்கவாசகர் விஜயகுமார் |
| மு/ 173 | திருமதி. பொன்னாச்சி கந்தசாமி |
| மு/ 228 | திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம் |
| மு/ 256 | திருமதி. திலகவதி செல்லத்தம்பி |
| மு/ 260 | திரு. சின்னத்தம்பி தவசிங்கம் |
| மு/ 277 | திரு. விநாசித்தம்பி தங்கராசா |
| மு/ 290 | திரு. சுப்பிரமணியம் குமாரசாமி |
| மு/ 346 | திரு. ஆறுமுகம் சேனாதிராசா |
| மு/ 354 | திரு. தம்பு யோகராசா |
| மு/ 385 | திரு. கந்தப்பிள்ளை சுப்பிரமணியம் |
| மு/ 440 | திரு. பொன்னையா மகாலிங்கம் |
| மு/ 487 | திரு. சின்னத்தம்பி கனகநாயகம் |
| மு/ 493 | திரு. தர்மலிங்கம் குழந்தைவேலு |
| மு/ 494 | திரு. இராசதுரை காந்தராசா |
| மு/ 520 | திரு. சின்னத்தம்பி சிவசிதம்பரம் |
| மு/ 527 | திரு. யோன்பிள்ளை ஜேஜுதவராசா |
| மு/ 548 | திருமதி. ஆரோக்கியம் தாவீது |
| மு/ 589 | திரு. மரியாம்பிள்ளை இராயப்பு |
| மு/ 601 | திரு. செபமாலை செல்வராசா |
| மு/ 632 | திரு. அந்தோனிமுத்து சந்தியோகுராசமுத்து |
| மு/ 635 | திரு. சவரிமுத்து செபமாலை |
| மு/ 652 | திருமதி. கலாநிதி பரமராசா |
| மு/ 702 | திரு. வேலாயுதம் கமலநாதன் |
| மு/ 752 | திருமதி. இராசம்மா இராசசேகரம் |
| மு/ 768 | திரு. செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| மு/ 777 | திரு. சின்னத்தம்பி ராஜா |
| மு/ 785 | திரு. முடியப்பு அல்வேட் |
| மு/ 810 | திரு. இராசையா வீரசிங்கம் |
| மு/ 815 | திரு. சதாசிவம் நடராசா |
| மு/ 836 | திரு. மாணிக்கம் இராசா |
| மு/ 870 | திருமதி. கலைச்செல்வி மகேந்திரராசா |
| மு/ 910 | திரு. கனகையா தவராசா |
| மு/ 970 | திரு. கணபதிப்பிள்ளை பரமானந்தம் |
| மு/ 1024 | திரு. சபாரட்ணக்குருக்கள் மாணிக்கவாசகசர்மா |
| மு/ 1033 | திரு. கந்தையா நடராசா |
| மு/ 1068 | திரு. செபமாலை சூசைப்பிள்ளை |
| மு/ 1081 | திருமதி. கமலம் சுப்பிரமணியம் |
| மு/ 1086 | திரு. கனகையா அழகேந்திரன் |
| மு/ 1102 | திருமதி. றோசலீன் திருச்செல்வம் |
| மு/ 1110 | திரு. ஐயாத்துரை விவேகானந்தன் |
| மு/ 1120 | திரு. இராயப்பு குணசீலன் |
| மு/ 1131 | திரு. டானியல் செபஸ்தி |
| மு/ 1177 | திருமதி. ஆரோக்கியமேரி யோசப்தம்பிராசா |
| மு/ 1179 | திரு. நல்லதம்பி வேலாயுதம் |
| மு/ 1183 | திரு. குணரத்தினம் இராசநாயகம் |
| மு/ 1185 | திரு. கட்டையர் கிருஸ்ணன் |
| மு/ 1208 | திரு. கிருஸ்ணபிள்ளை உதயகுமார் |
| மு/ 1210 | திரு. நடேசு கந்தராசா |
| மு/ 1213 | திருமதி. சரஸ்வதி சிவராசா |
| மு/ 1241 | திரு. செல்வன் யோகதாஸ் |
| மு/ 1242 | திரு. நடேசு விநாயகமூர்த்தி |
| மு/ 1261 | திரு. வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி |
| மு/ 1311 | திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன் |
| மு/ 1337 | திரு. சதாசிவம் தில்லையம்பலம் |
| மு/ 1347 | திரு. வீரகத்தி நாகலிங்கம் |
| மு/ 1361 | திரு. ஆறுமுகம் செல்லத்துரை |
| மு/ 1380 | திரு. மயில்வாகனம் சிவகுருநாதன் |
| மு/ 1382 | திரு. சுப்பிரமணியம் நற்குணராசா |
| மு/ 1388 | திரு. அல்பிறற் பாலசிங்கம்பத்திநாதர் |
| மு/ 1392 | திரு. வேலாயுதம் ரவீந்திரன் |
| மு/ 1430 | திரு. மோசஸ் அன்ரன் பெனடிற் |
| மு/ 1463 | திருமதி. நாகமுத்து சின்னப்பு |
| மு/ 1466 | திரு. செல்லத்துரை கணேசமுதலிப்பிள்ளை |
| மு/ 1473 | திருமதி. எலிசபெத்மலர் இராசேந்திரம் |
| மு/ 1520 | திரு. அழகு உக்குரவேல் |
| மு/ 1527 | திரு. சுப்பிரமணியம் சிவராசா |

**வவுனியா மாவட்டம்**

**மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்**

| | |
|---|---|
| வ/ 50 | திருமதி. செல்வரத்தினம் மாணிக்கம் |
| வ/ 53 | திருமதி. தங்கப்பொன்னு சுப்பிரமணியம் |
| வ/ 73 | திரு. இராசன் வீரையா |
| வ/ 78 | திரு. செல்லத்துரை சபாரத்தினம் |
| வ/ 88 | திரு. இராமலிங்கம் உருத்திரசிங்கம் |
| வ/ 101 | திரு. இளையதம்பி சபாபதிப்பிள்ளை |
| வ/ 106 | திரு. நாகமுத்து நல்லையா |
| வ/ 115 | திரு. ஆறுமுகம் தருமலிங்கம் |
| வ/ 121 | திரு. சின்னத்துரை தம்பையா |
| வ/ 130 | திரு. முத்தையா செல்வரத்தினம் |
| வ/ 133 | திரு. முத்துராசா பூபாலசிங்கம் |
| வ/ 140 | திருமதி. பரமேஸ்வரி இராசதுரை |
| வ/ 142 | திருமதி. சொர்ணலட்சுமி மார்க்கண்டு |
| வ/ 162 | திரு. முருகேசு தனஞ்செயன் |
| வ/ 170 | திரு. பாலசிங்கம் சுப்பிரமணியம் |
| வ/ 171 | திரு. செல்லையா செல்வரத்தினம் |
| வ/ 179 | திரு. வயித்தியாம்பிள்ளை பெனடிக்ற் ஞானப்பிரகாசம் |
| வ/ 225 | திரு. பொன்னையா சரவணபவானந்தம் |
| வ/ 231 | திரு. விநாசித்தம்பி பவேந்திரன் |
| வ/ 249 | திரு. சின்னப்பு கணபதிப்பிள்ளை |
| வ/ 273 | திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா |
| வ/ 276 | திருமதி. பாக்கியம் நாகரத்தினம் |
| வ/ 289 | திரு. பொன்னையா பாலசுப்பிரமணியம் |
| வ/ 312 | திரு. நல்லதம்பி வீரவாகு |
| வ/ 317 | திரு. கார்த்திகேசு கனகசிங்கம் |
| வ/ 359 | திரு. கணபதிப்பிள்ளை சின்னத்துரை |
| வ/ 387 | திரு. முத்துத்தம்பி தெட்சணாமூர்த்தி |
| வ/ 394 | திரு. நல்லையா தர்மபுத்திரன் |
| வ/ 400 | திரு. ஆறுமுகம் பத்மநாதன் |
| வ/ 401 | திரு. செல்லப்பா இராசசேகரம் |
| வ/ 421 | திரு. சுப்பிரமணியம் சோமசேகரம் |
| வ/ 433 | திரு. நாயகம் நாகப்பன் |
| வ/ 441 | திரு. சிறிகண்டு முருகையா |
| வ/ 455 | திரு. சவரிமுத்து இராசலிங்கம் |
| வ/ 507 | திரு. கறுப்பையா சிதம்பரம் |
| வ/ 512 | திரு. காசிப்பிள்ளை பாலசிங்கம் |
| வ/ 572 | திருமதி. கற்பகம் துரைராசா |
| வ/ 577 | திரு. சுவானி சந்தியோகு |
| வ/ 591 | திரு. சின்னத்தம்பி மகாலிங்கம் |
| வ/ 607 | திருமதி. வள்ளிப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| வ/ 621 | திரு. சிற்றம்பலம் பத்மநாதன் |
| வ/ 651 | திரு. முத்துக்குமாரு சிவசுப்பிரமணியம் |
| வ/ 664 | திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா |
| வ/ 677 | திரு. குருநாதன் நல்லதம்பி |
| வ/ 681 | திரு. வேலுப்பிள்ளை இராசநாயகம் |
| வ/ 710 | திரு. சிவகுரு சரவணமுத்து |

**குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்**

| | |
|---|---|
| வ/ 17 | திரு. கோபால் ஸ்ரீஸ்கந்தராசா |
| வ/ 34 | திரு. இராசையா கனகரட்ணம் |
| வ/ 43 | திரு. வேலுப்பிள்ளை செந்தில்நாதன் |
| வ/ 129 | திரு. கதிர்காமு வல்லிபுரநாதன் |
| வ/ 146 | திருமதி. நாகமுத்து பெரியதம்பி |
| வ/ 150 | திரு. ஆறுமுகம் பரராசசிங்கம் |
| வ/ 158 | திரு. கந்தையா இராசதுரை |
| வ/ 163 | திரு. அதிரியாம்பிள்ளை அலோசியஸ் |
| வ/ 177 | திருமதி. பொன்னுப்பிள்ளை செல்லத்தம்பி |
| வ/ 190 | திரு. தருமலிங்கம் நகுலேந்திரராசா |
| வ/ 221 | திரு. நாகேஸ் இரத்தினராசா |
| வ/ 227 | திரு. சின்னையா செல்வராசா |
| வ/ 238 | திரு. முருகர் தில்லையம்பலம் |
| வ/ 344 | திரு. அருளம்பலம் கனகசிங்கம் |
| வ/ 349 | திருமதி. ராதாலட்சுமி ஜெகநாதன் |
| வ/ 353 | திரு. சந்தனம் சிவரத்தினம் |
| வ/ 381 | திரு. நல்லதம்பி தியாகராசா |
| வ/ 437 | திரு. மாணிக்கம் வரதராசா |
| வ/ 446 | திரு. இரத்தினம் செல்வநாயகம் |
| வ/ 449 | திருமதி. குணேஸ்வரி சிவபாதசுந்தரம் |
| வ/ 457 | திரு. இராமலிங்கம் இந்திரராசா |
| வ/ 467 | திரு. கார்த்திகேசு சிவலிங்கம் |
| வ/ 470 | திரு. செல்லப்பா தம்பிராசா |
| வ/ 474 | திரு. அப்பாப்பிள்ளை இராசரத்தினம் |
| வ/ 498 | திருமதி. அபியாம்பிகைஅம்மாள் சுப்பிரமணியம் |
| வ/ 515 | திரு. காசிப்பிள்ளை அமிர்தலிங்கம் |
| வ/ 530 | திரு. கிருஷ்ணன் தேவசுதன் |
| வ/ 600 | திரு. சபாரத்தினம் பஞ்சவர்ணம் |
| வ/ 617 | திரு. அருணாசலம் காத்தலிங்கம் |
| வ/ 619 | திரு. செல்லையா செல்வராசா |
| வ/ 624 | திரு. கதிரவேலு சின்னையா |
| வ/ 644 | திரு. மயில்வாகனம் விமலானந்தன் |
| வ/ 693 | திரு. நாகலிங்கம் தர்மராஜா |

(முற்றும்)

# 29ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும்

திருமதி
சறோஜினிதேவி
வையாபுரி



கடந்த 21-08-2005 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் நாளை (18-09-2005) ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு எமதில்லத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

24, பொன்னப்பா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.P. 222 6132.
(39923)(50-11)

கணவர்: சு.வையாபுரி
மகன்: வை.சுரேஸ் (G.S.)
மகள்மார்: வசந்தி ரவி,
ஆனந்தி ஜெயக்குமார்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சறோஜினி சரவணபவன்

தோற்றம் 21-08-1947 மறைவு 28-09-2004

ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் நினைவில் வாழும் உங்கள் உறவுகள் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

30, குகன் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(39967)(46-14-19)

கணவர்,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.


# அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,செப்17

சங்கீதா இராமநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவனேசனும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறிலும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி க.கேசவனும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் நட்டுவாங்கம் திருமதி ஆனந்த ஜோதி தர்சனன், பாட்டு யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ஸ்ரீதர்சனன், மிருதங்கம் யாழ்.பல்கலைக்கழக நடனத் துறை விரிவுரையாளர் லயஞான வாரிதி எஸ்.மகேந்திரன், வயலின் ச.திபாகரன், சாயி பாஷா மு.கண்ணன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர். (9-202)

## 3 நாள் புகைப்படக் கண்காட்சி

சேது காண்பிய கலாசாரக் கல்விப் பிரிவு வழங்கும் ஜீ.ஜெயதீஸனின் புகைப்படக் கண்காட்சி நாளை தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியின் சம்பிரதாயபூர்வத் திறப்பு நிகழ்வு இன்று மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளது. (9-202)

## கண்காட்சியும் கலைநிகழ்வும்

யாழ்ப்பாணம்செப்.17

தீவகக் கல்வி வலயமும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடத்தும் வலய ரீதியான கண்காட்சியும் கலை நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முறைசாராக் கல்வி, முன்பள்ளிக் கல்வியின் உதவிக் கல்விப்பணிப்பாளர் க.கணபதியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் கலந்துகொள்வார். (9-202)

## கல்வி நடவடிக்கை திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்செப்.17

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண் கலைக்கழக முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (9-202)

## செஞ்சிலுவை மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்.17

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் அனுசரணையுடனும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவு, புங்குடுதீவு அலகு ஆகியவற்றின் உதவியுடனும் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இம்மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் இம்முகாம் நடைபெறும். இம் முகாமில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி திருமதி ஜெ.சிறீஸ்கந்தராஜா தலைமையிலான குழுவினர் வைத்திய சேவையை வழங்குவர்.

இதேவேளை- இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் சார்பில் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் முதலுதவிப் பயிற்சியின் இர்ண்டாவது அமர்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என கிளைத் தலைவர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (9-202)


# நீங்காத நினைவலைகள்

45ஆம் நாள் 2ஆம் ஆண்டு





செல்வி வெங்கடாசலம் தர்சினி அமரர் வெங்கடாசலம் சிவகுமார்

பிறப்பு 30-03-1981 இறப்பு 03-08-2005
பிறப்பு 02-02-1976 இறப்பு 06-09-2003

செந்தமிழ் வழங்கும் செட்டிய ஊர் வாழ்ந்த
- நீங்கூள் இனிப்
பைந்தமிழ் பேசிவர எப்போது காண்போம்?
கொடுந்தமிழ் நாம் பேசினும்,
- கோபியாது சென்று விடுவீர்கள் - இந்த
வண்டமிழ் நாட்டில் வாழமாட்டேன்
- என்று நினைத்தீர்களோ?

செட்டியாவூர்,
தொண்டைமானாறு. (40011) (24-46-14-19)

தகவல்:
குடும்பத்தினர்.

# பட்டப் படிப்புகள் கல்லூரி

புதிய மாணவர்களை அனுமதித்தல் 2006/2007

- G.AQ,
- B.A. PART I
- B.Com. PART II
- 1st in COMMERCE
- B.Com PART I

விரிவுரைகள் ஆரம்பம்:- 01.10.2005

பதிவுகள் 30.09.2005 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

57/18, ஸ்ரான்லி வீதி
(இலங்கை வங்கி முன்பாக), யாழ்ப்பாணம்.
(C/45115)(53-46-14-19)

இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி.

# பணிநிலைக்கான வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்திற்குத் திட்ட அலுவலர் பணி நிலைக்குப் புதிதாக ஆள்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தகைமையுடையவர்கள் தங்கள் தனிவரலாறு அடங்கிய (சுயவிவரம்) வேண்டுகையுடனும், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள்,ஏனைய தகைமைச் சான்றிதழ்களுடன் 21.09.2005 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் அருகில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்விற்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகைமைகள்**

- க.பொ.த.(உ/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன், அரச/அரச சார்பற்ற/தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல்வேண்டும்.
- ஆங்கிலம் ஓரளவு எழுத, வாசிக்க, பேச தெரிந்திருப்பதுடன், கணனி அனுபவமும் இருத்தல்வேண்டும்.
- தொழில் நுட்ப அறிவும் அனுபவமும் இருத்தல்வேண்டும்.

ஆளணி நிர்வாகப்பகுதி,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.
(சி/455147)(46-14-19)


# பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

புஸ்பராசா மோகனராசா,
15, இராசா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/484

எதிராக

மோகனராசா பெண் சுலோசனா,
67, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
எதிராளி

இவ்வழக்கு 2005ஆம் ஆண்டு ஆனி மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.மு.திருநாவுக்கரசு அவர்களும் பிரசன்னமாயிருக்க, இன்று ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சட்டத்தரணி வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த அனுமதிகோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தையும் சாட்சி தம்பிப்பிள்ளை தனபாலசிங்கத்தின் சாட்சியத்தையும் நெறிப்படுத்திய பின்னர் மன்று இப்பிராது வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் இடையில் 2004ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி பதிவுத் திருமணம் நடந்ததாகவும் அதற்கு அத்தாட்சியாக வ1 என்று அடையாளமிடப்பட்ட திருமணப் பதிவுச் சான்றிதழை அனைத்தும் இந்த எதிராளிக்கு தான் ரூபா. ஏழு லட்சம் பெறுமதியான தங்க வைர நகைகளை திருமணத்தின்போது கொடுத்ததாகவும் கணவரான தன்னுடன் இந்த எதிராளி கூடி வாழ மறுத்து காரணமின்றி தன்னை வன்மமாகப் பிரிந்து சென்றுவிட்டார் என்றும் இத்திருமணத்தால் தனக்கும் எதிராளிக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், எதிராளி சார்பில் எந்தவித பிரதிநிதித்துவமும் இந்நீதிமன்றத்தில் சட்டப்படியாகச் செய்யப்படவில்லை என்றும் அச்சந்தர்ப்பத்தில் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்காக இன்று நியமிக்கப்பட்டதென்றும் இந்த வழக்கில் எதிராளிக்கு அவர் கடைசியாக வசித்த யாழ்ப்பாணத்தில் உள்ள வதிவிடத்தில் பதில் சேவகம் மூலம் அழைப்புக் கட்டளை ஒப்படைக்கப்பட்டதென்றும் வழக்காளியின் சார்பில் வழக்காளியினதும் சாட்சி தம்பிப்பிள்ளை தனபாலசிங்கம் என்பவரின் சாட்சியமும் நெறிப்படுத்தப்பட்டு வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

வழக்காளி தனது சாட்சியத்தில் தனக்கும் எதிராளிக்கும் 19-03-2004 ஆம் திகதி திருமணம் நடந்ததாகவும் அவ்வாறு திருமணம் நடந்து ஒரு கிழமையின் பின் எதிராளி தன்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டதாகவும் மேலும் அவருடன் இணைந்து வாழ எடுத்த முயற்சிகள் ஒன்றும் கைகூடவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

தம்பிப்பிள்ளை தனபாலசிங்கம் தனது சாட்சியத்தில் இந்தத் திருமணப்பதிவின் 1ஆம் சாட்சிக்காரர் என்றும் இந்த எதிராளி வழக்காளியை விட்டுச் சென்றுவிட்டதாக அறிந்த பொழுது தான் அவர்களைச்சேர்த்துவைப்பதற்கு எடுத்த முயற்சிகள் ஒன்றும் கைகூடவில்லை என்றும் மன்றுக்குக் கூறியுள்ளார்.

இச்சாட்சியங்களின் அடிப்படையில் எதிராளியினால் வன்ம உறவறுப்பு ஏற்பட்டுள்ளதென மன்று கருதுவதால் இந்த வழக்கின் வழக்காளி தனது சாட்சியத்தின்போது எதிராளிக்குக் கொடுத்த தங்க, வைர நகைகளையோ அல்லது அதற்கு உரிய பெறுமதியையோ கோரவில்லை என்றும் கூறியிருப்பதனால் விவாகரத்துச் சம்பந்தமாக இந்த வழக்காளிக்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதி பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2004ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளிக்கு அறியப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவ்வாறு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளி ஆட்சேபனை தெரிவிக்காவிடின் மூன்று மாதங்களின் பின் இத்தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென்று கட்டளையிடப்படுகின்றது.

*2005ஆம் ஆண்டு ஆனி மாதம் 20ஆம் திகதி*

*வரைந்தது:*
*மு.திருநாவுக்கரசு*
*வழக்காளியின் சட்டத்தரணி.*

*மேலதிக மாவட்ட நீதிபதி,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

*நீதிமன்றின் கட்டளைப்படி*
*து.சிறீமோகன். பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

(சி/45185)(46-14-19)

# யாழ்.விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாகும் தூவல் நீர்ப்பாசனம்

தூவல்முறை நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கும், விவசாய அதிகாரிகளுக்கும் விளக்கமளிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய ஜெயின் நீர்ப்பாசனத்திட்டப் பொறியிலாளர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் 'உதயனு'க்கு வழங்கிய செவ்வி இது.

●கேள்வி: உங்களைப்பற்றிக் கூறுங்களேன்?

✱ பதில்: இந்தியா தமிழ் நாட்டைச் சேர்ந்த நான் ஜெயின் இரிகேசன் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் **(Jain Irrigation Systems Ltd)** நிகழ்ச்சித் திட்டப்பொறியிலாளராகப் கடமையாற்றி வருகின்றேன். எமது நிறுவனம் பல்வேறுபட்ட விவசாய உற்பத்திப் பொருள்களை நவீன கருவிகளாக வடிவமைத்து வழங்கிவருகின்றது. 30 நாடுகளுக்கு அவை விநியோகிக்கப்படுகின்றன. எமது கருவிகளைப் பயன்படுத்தும் பயனாளிகள் நல்ல வருவாயைப்பெற்று வருகின்றனர். அந்தளவிற்கு பாவனையாளர்களிடையே எமது நிறுவனம் பிரபல்யமாக உள்ளது.

●கேள்வி: இத்துறையில் எவ்வளவு காலம் பணியாற்றி வருகிறீர்கள்?

✱பதில் : நான் 1992 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இன்றுவரை பணியாற்றி வருகின்றேன். 3 வருடங்கள் அபுதாபியில் பணியாற்றினேன். கடந்த 2 1/2 வருடங்களாக இலங்கையில் இருந்து சேவை செய்கின்றேன். தற்போது எனது குடும்பத்தாருடன் நுகேகொடவில் தங்கியுள்ளேன்.

●கேள்வி : நீங்கள் யாழ்ப்பாணம் வருகை தந்ததன் நோக்கம் யாது?

✱ பதில் : நாம் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும், தூவல்முறை நீர்ப்பாசனம் தொடர்பாக பல வகையிலும் விளக்கமளித்து வருகின்றோம். அத்துடன், அவற்றை விவசாயிகளுக்கு பரீட்சித்தும் காட்டிவருகின்றோம். அதனை யாழ்.குடாநாட்டு விவசாயிகளுக்கும் காட்டி, அவர்களையும் உச்சப் பயன் அடையவைப்பதற்காகவே இங்கு வந்துள்ளோம். விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்குத் தெளிவான முறையில், வீடியோப்படங்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றின் மூலமும் செய்முறை மூலமும் தூவல்முறை நீர்ப்பாசனம் தொடர்பான பயிற்சிகளை வழங்கியுள்ளோம். விவசாயிகள் நல்ல ஆர்வமாகக் கலந்துகொண்டனர்.

●கேள்வி: விவசாயிகளை மட்டும்தான் சந்தித்தீர்களா?

✱ பதில்: இல்லை. நாங்கள் விவசாயம் தொடர்பான அதிகாரிகளையும் சந்தித்து



எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம்.



தூவல் சொட்டு நீர் கருவி (படங்கள்: பகீரதன்)

அவர்களுக்கு இவை தொடர்பான விளங்கங்களை அளித்துள்ளோம். அவர்கள்தானே விவசாயிகளுக்கு வழிகாட்டுபவர்கள். அவர்கள், தமது சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவுபெற்றனர்.

●கேள்வி: நீங்கள் இலங்கையில் எந்தெந்த இடங்களில் உங்கள் பயிற்சிகளை வழங்கி வெற்றி கண்டுள்ளீர்கள்?

✱ பதில்: கொழும்பு, நுவரெலியா, பண்டாரவளை, குருநாகல், குளியாபிட்டி, கண்டி, அநுராதபுரம் போன்ற இடங்களிலும் வட பகுதியில் வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களிலும் எமது பயிற்சிகளை வழங்கி, தூவல்முறை நீர்ப்பாசனம் தொடர்பான விளங்கங்களை அளித்துள்ளோம். கடந்த ஆண்டு நடுப்பகுதியில் சுன்னாகத்தில் தூவல் நீர்ப்பாசன அறிமுகம் செய்யப்பட்டது.

●கேள்வி: எந்தளவிற்கு உங்களது முயற்சி வெற்றியளித்துள்ளது என்று கூறுவீர்களா?

✱ பதில்: 20 வீதத்தில் இருந்து 200 வீதம்வரை விளைச்சலைப் பெருக்கியுள்ளோம். இதனைப் பெருவெற்றி என்றே கூற வேண்டும். அத்துடன் 50 வீதம் நீர் மிச்சப் படுத்தப்பட்டுள்ளதுடன், கூலியாள்களும் தேவையற்றுள்ளனர். அதேவேளை, ஒரேயளவான நீர் எல்லாப் பயிர்களுக்கும் போய்ச் சேருகின்றது.

எந்தவிதமான நிலத்திற்கும் இத்தூவல் முறை நீர்ப்பாசனம் வெற்றியளிக்கும் அதே வேளை, பசளைகளும் மிச்சப்படுத்தப்படுகின்றன. அனைத்துத் தாவரங்களிலும் ஒரேயளவான பயனைப் பெறமுடியும். உதாரணமாக தக்காளி என்றால் ஒரேயளவான பழங்கள் பெறப்படுகின்றன.

●கேள்வி: உங்கள் ஜெயின் நீர்ப்பாசனத் திட்ட நிறுவனம் இலங்கையில் உள்ள விவசாயிகளுக்குச் செய்துள்ள நன்மைகள் பற்றி.....?

✱ பதில்: தூவல்முறை நீர்ப்பாசனத்தை அறிமுகம் செய்வதே ஓர் வரப்பிரசாதம் தானே. அதைவிட வேறொன்று தேவையா? (சிரிக்கின்றார்) நுவரேலியாவில் 10மில்லியன் ரூபா செலவில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஊடாக தக்காளி, மிளகாய், கத்தரி போன்றவற்றை உடைய பச்சை வீடுகளை அமைத்து தவணைமுறையில் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம்.

செவ்வி கண்டவர் : **பகீரதன்**

●கேள்வி: யாழ்.குடாநாட்டு விவசாயிகளுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன ?

✱ பதில்: தண்ணீர் தங்கத்தை விட விலை மதிக்க முடியாதது. அதனைச் சரியான அளவில் பயன்படுத்துவதால் சிறப்பான விளைச்சலைப் பெறுவதோடு, இந்த மண்ணிற்கும் நாட்டிற்கும் நம்முடைய கடமைகளைச் செய்தவர்கள் ஆகிறோம். இதனைச் கருத்திற்கொண்டு, விவசாயப் பொருள்கள் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பாசனத் திட்டங்களைப் பயன்படுத்தி நீரைச் சேமித்து விளைச்சலைப் பெருக்குமாறு பணிவாக வேண்டுகிறேன். ✱




# சிறுவயதினரின் ஆற்றலை வளர்க்க 'ஆர்' அன் 'பி' யூசிமாஸ் அக்கடமி

யூசிமாஸ் அபாக்கஸ் பயிற்சி பெறும் மாணவர்கள் எதிர்காலத்தில் எதையுமே சாதிப்போம் என்ற நம்பிக்கை உடையவர்களாக மாறுவார்கள். அவர்களிடையே ஒருமுகப்பட்ட சிந்தனை உருவாகும்.

இவ்வாறு தெரிவிக்கின்றார் யூசிமாஸ் அபாக்கஸ்ப் பயிற்சியை வழங்கும் யாழ்.நகரப் பிரதிநிதி திருமதி.ராதை பாஸ்கரன்.

யூசிமாஸ் என்றால் என்ன? அதனால் ஏற்



பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள்

படும் நன்மைகள் என்ன? எமது குழந்தைகளின் எதிர்காலம் என்பன தொடர்பாக அவர் 'உதயனுக்கு' வழங்கிய செவ்வியின் போதே இதனைத் தெரி வித்தார்

இவர் யாழ்.நகரில் 'ஆர்' அன் 'பி'யூசிமாஸ் அக்கடமி ஒன்றை நடத்தி வருகின்றார். அத்துடன் சாவகச்சேரியிலும் யூசிமாஸ் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றார்.

அவரின் செவ்வி வருமாறு.

*கேள்வி: யூசிமாஸ் என்றால் என்ன?*

பதில்: யூசிமாஸ் என்பதன் விரிவாக்கம் யுனிவர்சல் கான்செப்ட் மெண்டல் அரித்மெடிக் சிஸ்ரம் என்பதாகும். இது குழந்தைகளின் அறிவாற்றலை நான்கு வயதில் இருந்தே பன்மடங்கு பெருக்குகின்றது. முறையான வழிகாட்டல் மூலம் குழந்தைகளிடம் புதைந்துள்ள அறிவாற்றல் வெளிக் கொணரப்படுகின்றது. குழந்தைகளுக்கு அபாக்கஸ் எனும் கருவியின் மூலம் கூட்டல், கழித்தல், பெருக்கம், வகுத்தல் ஆகிய கணக்குகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் பயிற்சிகளைப் பெற்ற குழந்தை அடுத்த சில மாதங்களின் பின்னர் அபாக்கஸ் எனும் கருவி இல்லாமல் மனதிலேயே அபாக்கஸை கற்பனை செய்து அதன்மூலம் கணக்குகளுக்கு விடைகாண இப்பயிற்சி உதவும்.

இளம் குழந்தைகளின் மனதில் மறைந்திருக்கின்ற கணக்குத்துறை மற்றும் பொது அறிவை கூர்மைப்படுத்தி இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு முன்னர் சீனர்""ரால் கண்டு பிடிக்கப்பட்ட வரலாற்றுச் .ıறப்புமிக்க அபாக்கஸ் எனும் மணிச் சட்டத்தை வைத்து கற்பிக் கப்படும் கல்வித்திட்டம்தான் யூசிமாஸ்.

*கேள்வி: யூசிமாஸ் குழந்தைகளுக்கு எவ்வாறு உதவுகின்றது?*

பதில்: யூசிமாஸ் சிறு வயதிலேயே குழந்தைகளின் மூளையின் முழுத்திறன் வளர்ச்சிக்கான பயிற்சிகளை அளித்து அவர்களது வேகத்தையும் விவேகத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. ஞாபகசக்தி ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படும் திறமைகளில் மிகச் சிறந்த ஒன்றாகும்.

செவ்வி கண்டவர்கள் : **கங்கா-தயா**
படங்கள் :- **மதன்**

அபாக்கஸ் மூலம் பயிற்சி பெறும் குழந்தைகளின் ஞாபகசக்தி பெருகிச் செல்லும். இவ்வாறு அபாக்கஸ் மூலம் பயிற்சிகளைப் பெறும் போது தூண்டப்படும் ஞாபகசக்திதான் காணும் அனைத்துப் பொருள்களையும் நிகழ்வுகளையும் படிக்கும், பார்க்கும், கே[illegible]கும் போது அதற்கான செய்திக[illegible] மூளையில் இருந்தி தேவை[illegible]படும் பொழுது சிறிதும் குறை[illegible]மல் செய்திகளை வெளிக்கொண்டு வர உதவுகின்றது.

இந்தப் பயிற்சியின் மூலம் குழந்தைகளுக்கு ஒருமுகப்பட்ட சிந்தனை, ஒரு விடயத்தை தெளிவாகப் புரிந்துகொள்ளல், நிகழ்வுகளை மனதில் தெளிவாகப் பதித்துவைக்கும் திறன், வேகமும் துல்லியமும், தெரிந்து கொள்ளல், படைப்பாற்றல், தற்சார்புநிலை, தன்னம்பிக்கை, கவனித்தல் போன்ற ஆற்றல்கள் உருவாகும்.

யூசிமாஸ் பயிற்சி பெற்ற சிறுவர் சிறுமியர் கணிதத்தில் மட்டுமல்லாமல் ஏனைய பாடங்களிலும் முன்னிலையில் திகழ்வார்கள்.

*கேள்வி: இந்தக் கற்கை நெறி யார் யாருக்கு உகந்தது?*

பதில் : குழந்தைகளுக்கு ஏற்ற ஒரு கற்கை நெறிதான் இது. ஐந்து வயது தொடக்கம் 13 வயதுவரையான குழந்தைகளுக்கு இந்தப் பயிற்சித் திட்டம் மிகவும் ஏற்றது. இது குழந்தைகளுக்கு போட்டிகளை எதிர்கொள்ளக் கூடிய பயிற்சிகளை வழங்குகின்றது.

குழந்தை சுமார் 13 வயதை அடையும் போது மூளையின் வளர்ச்சி கிட்டத்தட்ட 80 சதவீதத்தை தொட்டுவிடுகின்றது. மீதமுள்ள 20 சதவீத 'மூளை வளர்ச்சி வாழ்நாள் முழுமைக்கும் உள்ளது.

இதனால் அவர்களது குழந்தைப் பருவத்தில் அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்க வேண்டும். அதனையே இந்த யூசிமாஸ் கற்கைநெறி செய்துவருகின்றது. 13 வயதிற்குள் அந்தக் குழந்தைகளுக்கு இவ்வாறான ஆற்றல்களை நாம் வழங்குவோமேயானால் எதிர்காலத்தில் அவர்கள் மிகவும் சிறந்த ஒரு பிரஜையாக சமுதாயத்தில் உருவாகுவார்கள் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.



யூசிமாஸ் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள்

*கேள்வி: யாழ் மாவட்டத்தில் யூசிமாசின் அறிமுகம் எப்போது நிகழ்ந்தது?*

பதில் : யூசிமாஸ் மனக்கணித நிலையத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் இ[illegible]ங்குகிறது. இதன் யாழ்.நகரப்பிரதிநிதியாக நான் செயற்படுகிறேன். இங்கு 'ஆர்' அன் 'பி' யூசிமாஸ் அக்கடமி நடத்துகிறேன். அதன் மூலம் பாடசாலைகள் தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் கற்பித்து வருகின்றேன்.

யூசிமாஸ் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அறிமுகஞ்செய்யப்பட்டது. ஆரம்பத்தில் மூன்று வகுப்புகள்தான் நடத்தப்பட்டன. பொஸ்கோ, இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றில் ஆரம்பத்தில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பின்னர் ஒவ்வொன்றாக கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, சென்றல், பற்றிக்ஸ், இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை என்பன இணைந்து கொண்டன. அத்துடன் ஞானக்குழந்தை தனியார் கல்வி நிறுவனத்தினரும் இந்தக் கற்கை நெறியில் தமது மாணவர்களை இணைத்துக் கொண்டனர்.

யாழ்.நகரப்பகுதியில் மட்டும் 400இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் கற்கின்றனர். அதில் இரண்டு நிலைகளை முடித்து மூன்றாம் நிலைக்குச் செல்லும் மாணவர்களும் உள்ளார்கள்.

இந்த பயிற்சித் திட்டத்தில் 10 நிலைகள் உள்ளன. இது 30 மாதத் திட்டமாகவே நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு நிலைகளிலும் துல்லியமும், வேகமுமாக பயிற்சிகளை செய்யும் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சியை பெறுவதற்கு மாணவர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர். இதனை கற்கும் மாணவர்களும் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளார்கள்.

இதேவேளை தற்போது புலமைப் பிரிவில் பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருக்கும் மாணவர்களும் இந்தப் பயிற்சியை மேற்கொள்ள முன்வரவேண்டும். தமது பரீட்சைக்கு ஏதோவொரு வேகத்தில் அவர்கள்

(1 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள், கோழித்தீன் வகைகள், மருந்து வகைகள், முட்டைகள், புறொயிலர் பேட்டுக் குஞ்சுகளையும் பெற்றுக்கொள்ளலாம். லம்போ சிவகலை றேடர்ஸ், கோப்பாய்ச் சந்தி, S.L. பாம், கலைவாணி கல்வி நிலைய முன் ஒழுங்கை. (சி-45138)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:077 6088831 (40069)

## வீடு வளவு விற்பனைக்கு

திருநெல்வேலி வடக்கில் 3 பரப்புக் காணியுடன் வீடு ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:72/57, பணிக்கர்வளவு. T.P.: 077 9570786. (40038)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 698/5, சபாபதி வீதி, தலையாளி, யாழ்ப்பாணத்தில் (பூநாறிமரத்தடி OFF K.K.S., Road), 4 பரப்புக் காணியுடன் கூடியவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு T.P.: 0776 452495. (40071)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39654)

புறொயிலர் 1Kg 180/- சுத்தம் செய்தது 270/- கல்பேட் மற்றும் புறொயிலர் குஞ்சுகள், கிறேட்டயன் நாய்க்குட்டிகள், கோழித்தீன் என்பன விற்பனைக்குண்டு. New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K. Farm மானிப்பாய் வீதி, பெரிய மதவடி, உடுவில். (40080)

**Organ/violin Notes**

சினிமாப் பாடல்களுக்கான இசைக்குறிப்புகள் பாகம் 40, கேள்விஞானம் ஆகிய புத்தகங்களும் Guitar, organ, புல்லாங்குழல், ஆர்மோனிய ஆகிய இசைக் கருவிகளும் விற்பனைக்குண்டு

S.S.Rajeendran (40068)
*Karaweena Isaimanram,*
*75,Temple Rd.,Nallur.Jaffna.*
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே)

## தேவை

புத்தூர் கிழக்கில் புதிதாக தொடங்கவிருக்கும் பால் உற்பத்தி நிலையத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- காவலாளிகள்
- உதவி ஆள்கள்

தொடர்பு:- தலைவர்,
(40041) க.பத்மநாபன்,
*பெரிய தோட்டம், புத்தூர் கிழக்கு, புத்தூர்.*

## தொலைபேசி இயக்குநர் கணனி இயக்குநர் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு கணனி அனுபவமுடைய தொலைபேசி இயக்குநர் அல்லது பயிலுநர் (பெண்) உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நகருக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

*உடன் தொடர்புகளுக்கு:-*
0777 213953
222 7638 – 222 8387
(40062)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் (44/-). பேட்டுக்குஞ்சுகள் 19.09.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும் சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, சன்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39764)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, கார்த்திகை 2ஆம் பாதம், 7இல் செவ்வாய், கிரகபாவமற்ற, 75ஆம் ஆண்டு, பிரான்ஸ் P.R உள்ள சொந்தத் தொழில் செய்யும் 6' அழகிய சிவந்த மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய, A/L படித்த, மணப்பெண் தேவை. தொடர்பு: இராமச்சந்திரன், 56/24, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணம். T.P.No.: 0779173600 (குறிப்பு, படம் என்பவற்றுடன் தொடர்புகொள்ளவும்). (39951)

## காணவில்லை

சிவப்பு நிறமுடைய முன், பின் வளைந்த கொம்பினை உடைய ஜேசி இன கறவைப் பசுவினைக் காணவில்லை. கண்டவர்கள் கீழ் காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். S.சிவராமலிங்கம், 70, குருசோ வீதி, சுண்டிக்குளி. சன்மானம் வழங்கப்படும். (40064)

## தவறிவிட்டது

அளவெட்டிக்கும் உடுவிலுக்கும் இடையில் திருமண வைபவங்களுக்குரிய சோடனைப் பொருள்கள் அடங்கிய உரப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பமகேந்திரராசா, இணுவில் மேற்கு, இணுவில். T.P.: 0777 222447. (40065)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**
*10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.* (#44956)

## வீடு வாடகைக்கு

*கோயில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.*
(அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
*தொடர்பு:* சலோமி மல்ரி கொம்பிளெக்ஸ்
இல.43, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(FROUT நிறுவனம் முன்பாக)
(40082) T.P.NO.:0776138250.

## வேலைக்கு ஆள் தேவை

எமது கண்ணாடிக் களஞ்சியத்திற்கு கண்ணாடி வெட்டுவதில் அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு:
**'தபோதரன்'**
கண்ணாடிக் களஞ்சியம்,
இல.57, கே.கே.எஸ்.வீதி,
(சி/45140) சுன்னாகம்.

## கலை இலக்கிய ஒன்றுகூடல்

தேசிய கலை, இலக்கியப் பேரவை நடத்தும் கலை இலக்கிய ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த கவிஞரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான கலாநிதி இ.முருகையனின் 70 ஆவது பிறந்த தினத்தையொட்டி இந்த ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேரவையின் செயலாளர் க.தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சி.சிவசேகரம், தே.தேவானந் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'கவிதைக்குள் உயிர் ஒன்றி வாழ்' என்னும் தலைப்பில் கவியரங்கும் இடம்பெறும். (ஒ-202)

## பயிலரங்கு

வட இலங்கை சர்வோதயம், கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்ட பயிலரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகக் கேட்போர் கூடத்தில் இப்பயிலரங்கு ஆரம்பமாகும். (ஒ-9-204)

## கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மாணவர் ஆக்கக் கண்காட்சி எதிர்வரும் 21,22 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும், இடைநிலை, உயர்தரப் பிரிவு மாணவர்களின் ஆக்கக் கண்காட்சி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (ஒ-117)




# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மண் மகிழ | விண் மகிழ |
|---|---|
| 20 - 02 - 1953 | 18 - 08 - 2005 |

அமரர்

## கனகரெட்ணம் ஜெயராஜசிங்கம்

*(உரிமையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவன தேநீர்ச்சாலை )*

கடந்த 18-08-2005 அன்று சிவபதமடைந்த எமது குல விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (17-09-2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காட்டுச் சந்தை அருகில்,
யாழ்ப்பாணம்.

**மனைவி,**
**ஜெ.சுலோஜனா**
*(யாழ்.ப.நோ.கூ.சங்கம்).*
(40067)(26-16-19-29)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 08 - 1986 | 24 - 04 - 2005 |



## செல்வி லபீந்திரன் யமுனா

**மாறாத புன்னகையுடன் மகிழ்வித்தீரே!**
**மாறாக எம்மை விட்டுப் பிரிந்தீரே!**
**ஆறு மாதம் கடந்தாலும் உம் நினைவு**
**ஆறாதம்மா எம் வாழ்வில்.**

*உன் பிரிவால் வாடும்:*
அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பையா, தங்கைமார், தம்பிமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்.

*பருத்தியடைப்பு,*
*ஊர்காவற்றுறை.* (40074)(39-16-19-29)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு கனகரெத்தினம்

*(இளைப்பாறிய லைடன் பக்ரி மரவேலைப் பகுதி மேற்பார்வையாளர், காளிகா புவனேஸ்வரி அம்பாளின் முதிய அங்கத்தவரும், பரிபாலனசபைப் போசகரும்)*



கரம்பன் கிழக்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வோல்ஸ் லேனைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கனகரெத்தினம் அவர்கள் 14.09.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு- செல்லம்மா தம்பதியரின் அருமைப் புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பர்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அருமைக் கணவரும் நிர்மலா, யோகரெத்தினம், அரசரெத்தினம், பிறேமாவதி, ராசரெத்தினம், தேவரத்தினம், விஜயரெத்தினம் ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவபாலன், சிவமலர், மோகனேஸ்வரி, நிரஞ்சன், ராஜகுமாரி, மோனிக்கா, இராசகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்ற சுந்தரம் மற்றும் சிவஞானம், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சீவரெத்தினம், அழகம்மா, சிவபாக்கியம், வள்ளியம்மை, சிவகாமியம்மை, தங்கராசா அவர்களின் பாசமுள்ள மைத்துனரும் சிவாகர், சிவாஜினி, செந்தூரன், சிந்துஜா, யாழினி, டன்ஜா, அஸ்வினி, அபிராமி, அஜித், சுஜித்தா, சதீஸ்குமார், திவ்வியா, சோபியா, மிதுஷன், ராஜிப், யஸ்மின், பிரேமி, விஸ்விதா ஆகியோரின் பாசமுள்ள அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கரம்பன், காளிகோயிலடியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோட்டை வாசல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*காளி கோயிலடி, கரம்பன் கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.* (40072)(39-16-19-29)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**







*வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலை இலக்கியப் பெரு விழாவின் ஆரம்ப நாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் கொடியேற்ற நிகழ்வு இடம்பெறுவதையும் நடைபெற்ற கலை நிகழ்வுகளில் ஒன்றையும் படங்களில் காண லாம்.*
*(படங்கள்: சுந்தரலிங்கம் )*

# மக்கள் முகம்



நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நகுலராசா சறோஜாதேவி தம்பதியின் சிரேஷ்ட புதல்வியும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியா லய கலைப்பிரிவு மாணவியுமான நகுலராசா கோகுலராணி 2005ஆம் ஆண்டு தமிழ்மொழித் தினக் கவிதைப் போட்டியில் மாகாண, மாவட்ட மட்டங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் பேச்சு, விவாதம் போன்றவற்றிலும் கடந்த காலங்களில் கோட்ட, வலய மட்டங்களில் சிறப்பு இடங்களைப் பெற்றவர். விளை யாட்டுத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் கோட்ட மட் டத்தில் சிறந்த வீராங்கனையும் ஆவார்.

தீவக வலயத்தில் இருந்து மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒருவர் என்ற சிறப்பைப் பெற்றதன் மூலம் இவர் நெடுந்தீவுக் கோட்டத்திற்கும் தீவக வல யத்திற்கும் சிறப்பைத் தேடிக்கொடுத்துள்ளார்.



முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைக்கு தமிழ் உதவிக் கல் விப் பணிப்பாளராக திருமதி குணலட்சுமி சிவசுந்தரம் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்டவர். தமது கல்வியை ஆரம்பம் முதல் உயர்தரம் வரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கற்றார். 1985ஆம் ஆண்டு முதல் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தமிழ் சிறப்புப் பட்டதாரி ஆசிரியராகவும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி யின் பிரதி அதிபராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

. இவர் முல்லைத்தீவுப் பிராந்திய கல்விமாணி, வெளிவாரிப் பட்டப் படிப்பு, பட்டப்பின் டிப்ளோமா ஆகியவற்றின் பகுதிநேர விரிவுரையாளரும் ஆவார். தமிழ் முதுமாணிப் பட்டதாரியான இவர் முல்லைத்தீவு தமிழ்ச் சங்கத்தின் பத்திராதி பராவார்.

(353)



முல்லைத்தீவு வலய உளவளத்துணை வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகராக திருமதி சியாமினி கென்றிலிஸ்மன் நியமனம் பெற்றுள்ளார்.

ஆசிரியராக 1992ஆம் ஆண்டு தம்பாட்டி அ.த.க.பாடசாலையில் நியமனம் பெற்ற இவர் அங்கு 4 வருடங்கள் பணியாற்றினார். 1996 ஆம் ஆண்டு முதல் உடையார்கட்டு ம.வியில் இவர் கடமையாற்றினார். அப்பாடசாலையில் 5 வருடங்கள் பகுதித் தலைவராகவும் இவர் இருந்து வந்துள்ளார்.

2003ஆம் ஆண்டில் ஜி.ரி.சற் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் நடத்தப்பட்ட 6 மாதகால உள வளத் துணையாளர் பயிற்சியைப் பெற்ற இவர் அப்பயிற்சியில் முதலாம் தரத்தில் சித்தி யடைந்தார். இதன் பயனாக ஜி.ரி.சற் நிறுவனத்தின் அனுசரணையுடன் 01.03.2005 முதல் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உளவளத்துணை இணைப்பாளராக நியமனம் பெற் றார். முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் சிறப்பான முறையில் உளவளத்துணைச் செயற் பாடுகளை மேற்கொண்டு வந்த இவர் தற்போது வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(353)



*தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு கிளிநொச்சி பெண்கள் மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கிராம அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை சிரமதானம் மேற்கொண்டனர்.* *(படம்:சி.கேசவன்)*

# நூல்வரிசை



**நூலின் பெயர்:** *வழி*
**தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்**
**வெளியீடு:** *கப்டன் வானதி வெளியீட்டகம்*
*இல. 16, கனகபுரம், கிளிநொச்சி.*

கதை உருவாக்கம் என்பது தமிழ் இலக்கிய உலகிற்கு புதிய விடய மல்ல. நீதிக்கதைகள், பஞ்ச தந்திரக்கதைகள், உருவகக் குட்டிக்கதைகள், கிராமியக் கதைகள் என்று வழிவழியாகவே பரிச்சயம் கொண்டது தமிழ் இலக்கிய உலகு. தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றம், வளர்ச்சி என்பன மிகமிகத் தொன்மையானவை என அறிகின்றோம். சிறுகதைகளுக்கு அளவு, பரிமாணங்கள் கிடையாது. கதைக்காகத் தெரிவுசெய்யப்படுகின்ற கருவும், கதையை அமைக்கின்ற முறை, பாத்திரங்களின் தெரிவு, கதையை நகர்த்துகின்ற திறன் எல்லாம் சேர்ந்தே கதையை ஆழ மாக்குகின்றன.

இங்கே நூலுருப் பெற்றுள்ள பதின்மூன்று சிறுகதைகள், முழுமையும் பெண்களால் படைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து கதைகள் போராளிப் படைப்பாளிகளுடையவை.

தங்கள் மனங்களை ஊடுருவிய அல்லது உள்நுழைந்த கருக்கள் பலவற்றை இங்கு இவர்கள் கதையாக்கியிருக்கிறார்கள். வன்னிமக்களின் கௌரவம் சிவாஜினி - சிவசங் கரின் மனிதத்துக்குள், கிருஷ்ணவேணியின் - பூ ஒன்று புயலானது - குமுதினியின் பய ணம்- சமூகத்தின் மனச்சாட்சியைத் தொட்டு உலுப்புவனவாய் இருக்கின்றன. பயணம்- அவலத்தின் உச்சமாய் அமைந்திருக்கிறது. ஒரு பெண்ணின் அகவலிமை நேர்த்தியான முறையில் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. அலையிசையின் 'மௌனத்திரைவிலக' வில் வரும் சறோ. எத்தனையோ சறோக்கள் இன்னமும் 'சட'மாக இருக்கிறார்கள். ''சட''நிலை உடைக் கப்பட்டு உயிர்த்தல் நிகழும்போதுதான் இந்த அவலமும் தீரும்.

கிருஷ்ணவேணியின் ''பூ ஒன்று புயலானது'' வில் தேசத்துரோகம் செய்யும் துணை வனுக்குத் தண்டனை வழங்கும் பெண். வியப்பும், கேள்வியும், ஐயப்பாடும் ஏற்பட்ட போதும்- நிகழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம். சிவாஜினி சிவசங்கரின்- மனிதத்துள் வரும் ''அகிலன்'' ஒரு குறியீடு. காலங்காலமாய் சமூகத்தில் புரையாடிக் கிடக்கும் ஒரு அநாகரிகத்தைச் சுட்டி நிற்கிறது.

ஆதித்த நிலாவின் 'எங்கே கண்ணைத் திறவுங்கோ' நகர்வுப் போக்கில் தன்னை வித்தி யாசப்படுத்திக் காட்டுகிறது. அவருக்கே உரிய தனித்துவமான படைப்பு அது. அமரர் சந் திரா அற்புதலிங்கத்தின் 'வழி' சில கேள்விகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் பதிலிறுக் கிறது. இரு போராளிகளின் மத்தியில் ஏற்பட்ட மென்மையான காதலுணர்வை குறைக் காமலும், மிகைப்படுத்தாமலும் தந்துள்ளார். சந்திரா, கதையைப் படித்து முடிக்க முகம் தெரியாத அவ்விரு போராளிகள் மீதும் மரியாதை கூடுகிறது.

காந்தாவின் நெஞ்சுக்குள்ளே - மலைகளின் - புலிவாலைத்தேடி அம்புலியின் ''உள்ளே எரியும் தீ'' மூன்றும் போர்க்காலத்தை, களத்தை நினைவில் நிறுத்துபவை. மலைமகள் தன் மனதிலுள்ள எண்ணக்கருவை தனக்கே உரிய தொனியில் சொல்லும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இந்தக் கதையிலும் இவரின் ஆற்றல் மிளிர்கின்றது. இக்கதை மூலம் ஒரு காலத்தைப் பதிவு செய்கின்றார் மலைமகள்.

அம்புலியின் உள்ளே எரியும் தீ - மெல்லிய உணர்வொன்றை கதை முடியும்வரை நூலிழை யாய் இழுத்துச் செல்கிறது. கதையின் நிறைவுப்பந்தி கதைக்கு ஒரு கதையைக் கொடுக்கிறது.

சில கதைகளில் ஆசிரியர் பேசும் தன்மை தூக்கலாக இருக்கிறது. இது படிப்போருக்குச் சலிப்பை ஏற்படுத்தும். ஆனாலும் கதை நகர்வுகள் நன்றாகவே உள்ளன. காலத்தை வென்று நிற்பவை இலக்கியப் படைப்புகள். எமது இலக்கியப் படைப்புகளும் நின்று வாழும் பேறு பெறவேண்டும். இலக்கியத்துக்கு முன்னுதாரணமாய் காட்டக்கூடிய எத்தனையோ படைப் புகள் இங்கு இருந்தபோதும் அவை கண்டுகொள்ளப்படாமலே இருக்கின்றன. அவையும் அவைபோன்ற படைப்புகளும் கண்டுகொள்ளப்படுவதற்கு கப்டன் வானதி வெளி யீட்டகமும் ஏனைய வெளியீட்டு நிறுவனங்களும் நூல்களை வெளியிடுவதோடு மட்டும் நின்றுவிடாது, அதற்கப்பாலும் பணியாற்றவேண்டும். ஏனென்றால் இங்குள்ள இலக்கியப் படைப்புகளின் கருக்களில் இரத்தமும், தசையும், நிணமும் ஆன்மாவின் துடிப்பும் நிறைந்துள்ளன. கற்பனைகள் என்பதற்கு இடமில்லை. உண்மையின் பிரதிபலிப்பாய் அவை இருக்கின்றன என்பது புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பதில் வெளியீட்டு நிறுவனங்கள் அக்கறைகொள்ளவேண்டும் எனவேண்டிக்கொள்கிறேன்.

இதேவேளை - படைப்பாளர்களும் தங்களுடைய படைப்புகளின் தரத்தை உயர்த்து வதில் அக்கறைகாட்டவேண்டும். இந்தத் தொகுதியைப் போலவே பல படைப்பாளர்களின் படைப்புக்கள் ஒரே தொகுதியில் வெளிவருவது ஆரோக்கியமாக அமையும்.

**- ஆதிலட்சுமி சிவகுமார்.**



**நூலின் பெயர்:** *மங்கை - சீதா*
**ஆசிரியர்:** *சுகணா*
**வெளியீடு:** *அழகன் பிரசுரம், பாரதிதாசன் நூலகம்,*
*அல்வாய், தமிழ் ஈழம்.*

சுகணா என்ற புனை பெயரில் எழுதப்பெற்ற 'மங்கை - சீதா' என்னும் இந்நூல் புதுவிதமாக புதிய பாணியில் எழுதப்பெற்றிருக்கும் என்ற ஆவ லோடு நூலைவாசித்தேன் அல்ல. படித்தேன்.

பல களங்களைக் கண்ட இவ்விலக்கியச் செம்மல் இந்நூலில் பல்வேறு சம்பவங்ளை இரு பிரதான பாத்திரங்களுடன் இணைத்து நடமாடவிட்டிருக்கின்றார். குடும்ப வாழ்வில் சந்தேகம் என்பது ஒரு பேய் போலவும், கறையான் போலவும் பயமுறுத்தியும் அரித்தும் காலங்காலமாகச் சீரழித்து வருவதையும், மனிதன் ஒரு சந்தேகப் பிராணி என்பதையும் பலவிடங்களில் சுட்டிக்காட்டிச் செல்கின்றார் மங்கை - சீதாவில் நூல் ஆசிரியர். தம்வாழ் நாளில் அனுபவித்தவற்றையும் அவதானித்த நிகழ்வுகள், சம்பவங்களையும் கொஞ்சு தமிழ்கலந்த செந்தமிழில் காதல் ரசம் சொட்ட இளைஞர்களின் மனவுணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

குறிப்பாக, மங்கை சுந்தரம் இல்லறத்தினை நல்லறமாய்க்கொண்டு வாழும் பாங்கை யும் சீதாவின் காதல் வாழ்வில் சபலங்கள் ஏற்படுத்திய விபரீதங்களையும் எடுத்து உரைக் கும் விதம் சமுதாயத்தை நல்நெறியில் செல்லவைப்பதே நூலாசிரியரின் எண்ணக்கரு என்று எண்ணத்தோன்றுகிறது.

மேலும், கொழும்பு வாழ்க்கையில் அனுபவிக்கும் சம்பவங்களை சீதா - தங்கராசன், கோகிலம் - தங்கராசன் வாழ்வுமூலம் உணர்த்தும் விதமும் அவர்களின் சவால்களுக்கு ஏதுக்களாக அமைந்த சூழ்நிலைகளை சிறப்பாக படம் பிடித்துக்காட்டும் விதமும் இளம் சமுதாயத்தை சிந்திக்க வைப்பவையாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

*வசந்த காலத்து வேப்ப மரம் போல்...*
*மொட்டு அரும்பும் போது அதனைக் காக்க...*
*இப். போ. சா......*
*எம தூதர்கள் இப்போ டாச்சி டிரைவர் கள்.....*
*பிரம புருடர்கள்.....*

'எத்தனை முறை என் தாய் இறந்திருப்பார்' 'இலட்சங்கள் நடமாடும் உலகில் இலட் சியங்களுக்கு இங்கு என்ன வேலை' 'எத்தனை முறை என் மாமன் பரலோகம் போயி ருப்பார்' இப்படி நகைச்சுவையுணர்வுடன், சிந்திக்க வைக்கும், கருத்தாழம் மிக்க பற்பல சொற்றொடர்களால் நிரம்பி மங்கை - சீதா எம்மை ஆகர்சித்துக் கொண்டாள்''

**- சீ.குலசிங்கம்.**

# இந்திய வைத்திய நிபுணரின் சேவையைப் பெற வசதி

குருநகர்,செப்.17

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள என்பு முறிவு வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.பஜாஜ் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை யிலும் -

செவ்வாய்க்கிழமைகளில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையிலும், வியாழக் கிழமைகளில் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையிலும் நோயாளர்களைப் பார்வை யிடவுள்ளார். மேற்படி வைத்திய நிபுணரிடம் வைத்திய ஆலோசனைபெற விரும்புவோர் இத்தினங்களில் மேற்படி வைத்தியசாலைகளில் ஆலோசனைகளைப் பெற்றக்கொள்ளலாம் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

(எ-51)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமசுந்தரம் திலகவதி



தங்கோடை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் விளானை, காரைநகரை வசிப்பிடமாகவும் தற்போது 78, அரசரடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி சோமசுந்தரம் திலகவதி நேற்று (16-09-2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் கணபதிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் கார்த்திகேசு கந்தையா தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தையா, சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற பொதுசன சௌக்கிய பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் கமலாம்பிகை (சாந்தி), ஞானாம்பிகை, விமலாதேவி (இந்தியா), சரோஜினிதேவி, சிவகுமார் (சிவசக்தி நகைமாடம்) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மநாதன் (விவசாய போதனாசிரியர்), பாலசுப்பிரமணியம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), சிவபாலசுப்பிரமணியம் (இந்தியா), குகேஸ்வரராஜா (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிவாஞ்சலி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நமசிவாயம் (ஓய்வுபெற்ற ஓவசியர்), கமலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவசோதி, காலஞ்சென்றவர்களான டாக்டர் பரஞ்சோதி கனகபாக்கியம், கனகபூசனி, மகாலிங்க சூரியர் நாகபூசனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஷாந்தன், சாமினி, யசோதினி, கம்ஷவாகினி, குகநேசன், குகப்பிரியன் (பொறியியற்பீடம், பேராதனை), கஜதீபன் (மருத்துபீடம், திருநெல்வேலி, இந்தியா), கிருத்திகா, சஷ்டிகா, ராஜி, தியான, ரம்யா (வேம்படி மகளிர் கல்லூரி), தர்மிகன், நிலக்ஷன், நிசாந்தன், நிவேதிகா, அனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18-09-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

78, அரசடி வீதி,
யாழ்ப்பாணம் (40086(24-17-15).

தகவல்:
மகன் - **சோ.சிவகுமார்**
*(சிவசக்தி ஜுவல்லறி).*

## வெள்ளையன் கந்தையா



கச்சேரி - நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளையன் கந்தையா 14-09-2005 அன்று காலமானார்.

அன்னார் சின்னத்துரை, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மதியாபரணம் (ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், - மண்டைதீவு), புஸ்பமலர் (மானிப்பாய்), புஸ்பராஜா (யாழ்ப்பாணம்), பரராஜா (ஜேர்மனி), மகேந்திரராஜா (மாநகர சபை ஊழியர்), சிறிதாஸ் (கொலண்ட்), விஜி (ஜேர்மனி), சதீஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-09-2005) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''மதி ஒளி இல்லம்'',
28, ஆசீர்வாதப்பர் வீதி,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (40093) (24-11-17)

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

## செல்லர் சின்னத்துரை (வாழையர்)



அம்மன் கோயில் வீதி, உடுவிலை பிறப்பிடமாகக் கொண்ட செல்லர் சின்னத்துரை அவர்கள் 2005-09-15 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (2005-09-18) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, காலை 10 மணியளவில் இணுவில் பூவோடை இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோயில் வீதி,
உடுவில். (40098(24-17-11)

தகவல்:
**பிள்ளைகள்.**

## உள்ளூராட்சி வருமான ஊழியருக்கு!

தென்மராட்சி,செப்.17

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் சங்கத்தின் கல்ந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வலி.கிழக்குப் பிரதேச சபை புத்தூர் உப அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் அனைத்து வருமான பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு சங் கச் செயலாளர் பொ.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஓ-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ். பாரதி சன சமூக நிலையத்தின் உள்ளூராட்சி வாரம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஓ-13)

## சிறு வயதினரின்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்றலை மேற்கொண்டிருப்பார்கள். அந்த வேகத்தோடு இந்த அபாக்கஸ் கல்வியைத் தொடர்ந்து படிக்கலாம்.

*கேள்வி: அபாக்கஸ் கல்வியை போதிக்கும் ஆசிரியர்கள் என்ன தகுதியுடையவர்களாக இருக்கின்றனர்?*

பதில்: அபாக்கஸ் கல்வியை எல்லோராலும் வழங்கமுடியாது. அதற்கான பயிற்சிகளை எடுத்தவர்களாலேயே வழங்கமுடியும். எமது நிறுவனம் இதற்கெனப் புறம்பாக ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி அவர்கள் மூலமே மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கிவருகின்றது.

நான் ஆரம்பத்தில் அக்கடமி நடத்தும் நோக்குடன் பயிற்சியை எடுக்கவில்லை. எனது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே நான் இதனை முதலில் கற்றேன். அதன் பின்னர் தான் எனக்கே இப்படி ஒரு நோக்கம் வந்தது. நான் இந்தப் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறேன். பயிற்சிகளை வழங்கும்போது அவர்கள் காட்டும் ஆர்வம் எனக்கு இதில் மேலும் ஈடுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலான மாணவர்களுக்கு இந்தக் கற்றலில் ஆர்வம் உள்ளது. ஆனால், அவர்களிடம் வசதிகளில்லை. அதனால் அவர்கள் இந்தக் கல்வியை மேற்கொள்ளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இருந்தும் வறுமையை ஒரு பொருட்டாகக் கருதாது தமது பிள்ளைகளின் எதிர்காலமே நோக்காகப் பெற்றோர்கள் கொள்வாரேயானால் தமது பிள்ளைகளை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வரமுடியும்.

*கேள்வி: அபாக்கஸ் பயிற்சியில் ஈடுபடும் பிள்ளைகளின் நிலைமை குறித்து...?*

பதில் : இங்கு அபாக்கஸ் பயிற்சிகளில் ஈடுபடும் பிள்ளைகள் மிகவும் ஆர்வத்துடனும் ஊக்கமாகவும் செயற்படுகின்றார்கள். அத்துடன் தன்னம் பிக்கை உள்ளவர்களாகவும் ஆளுமை உள்ளவர்களாகவும் வளர்கிறார்கள். மிகவிரைவாக எதனையும் செய்யக்கூடிய திறமை இவர்களிடம் தானாகவே வந்து விடுகிறது.

அத்துடன் இவர்களிடம் ஒரு முகப்பட்ட சிந்தனை உருவாகும். இது பாடசாலைப் பாடத்திற்கு மிகவும் உதவுகின்றது. பாடசாலைகளில் கற்பிக்கும்போது அவர்கள் மனதை அலைய விடாது, பாடத்திலேயே கவனமாக இருப்பார் கள். இது குழந்தைகளுக்கே ஏற்ற சிறந்ததொரு திட்டமாகும்.

எவ்வளவு பணச் செலவு ஏற்படுகிறது என்பதனைக் கணக்குப்பார்ப்பதைவிட்டு பிள்ளைகளை இந்தக் கல்வியில் இணைக்க வேண்டும். அவர்களது எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும்.

அபாக்கஸ் பயிற்சி பெறும் மாணவர்களின் பெற்றோர்கள் எங்களிடம் கூறுகின்றனர், தங்கள் பிள்ளைகளில் மாற்றம் தெரிகின்றது என்று. அது போலத்தான் பாடசாலை ஆசிரியர்களும் கூறுகின்றனர்.

ஒக்ரோபர் 16ஆம் திகதி இலங்கையில் தேசிய அளவிலான அபாக்கஸ் பயிற்சி பெறும் மாணவர்களிடையே போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இதற்கு இங்கிருந்தும் மாணவர்களைக் கொண்டு செல்லவேண்டும் என்பதே எனது ஆசையும் அவாவுமாகும். அதற்காக நான் பாடுபட்டு வருகின்றேன்.

சர்வதேச மட்டப் போட்டி நவம்பர் மாதம் மலேசியாவில் நடைபெறவுள்ளது.

அந்தப் போட்டி யில் பங்குபற்றுவதற் காக மாணவர்களை தெரிவு செய்வதற்கே ஒக்ரோபரில் போட்டி நடத்தப்படவுள்ளது.

*

**JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING**

THE ANNUAL GENERAL MEETING IS POSTPONED DUE TO OUR HONY SECRETARY Mr.T.ANANDARATNAM'S DEMISE, A NEW DATE WILL BE ANNOUNCED LATER

N.JEYARANJITHAN
HONY PRESIDENT
JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION
VADDUKODDAI.

(40094)




## கிரிக்கெட் இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.17

அரியாலை சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணியளவில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறும்.

இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய வி.க. அணியை எதிர்த்து சிக்ஸ்ஸ்ரார் வி.க. அணி மோதுகின்றது.

மின்னொளியில் இரவு 8 மணிக்கு இடம்பெறும் கரபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய வி.க. அணியை எதிர்த்து இந்து இளைஞர் அணியினர் மோதுகின்றனர். (ஐ-190)

* * *

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பி.ப. 3.30 மணியளவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கழுகுகள் வி.க. அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வி.க. அணி மோதுகின்றது. பிரதம விருந்தினராக ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் ந. குணசீலனும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகனும் கலந்து கொள்வர். (ஐ-190)

## பிற்போடப்பட்டுள்ளது

**யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்காக 18.09.2005 அன்று நடைபெறவிருந்த ராகம்ஸ் இசைக்குழுவின் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 09.10.2005 அன்று பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

(40089) (39-11-17) - அதிபர்

## கண்ணீர் அஞ்சலி

வண்ணார்பண்ணை - காட்டுத்துறை
அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோயில்
முகாமையாளரும், உரிமையாளர்களில் ஒருவருமாகிய
நாவற்குழியூர்

### சடாட்சரம் சோமலிங்ககுமார்

அவர்களின் மறைவிற்கு எங்கள் அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது சேவைகளை நினைவு கூறுகின்றோம்.

காட்டுத்துறை பிள்ளையார் கோயில்,
ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

*ஆலய முகாமையாளர்,*
*உரிமையாளர், ஆலய அர்ச்சகர்கள்,*
*விநாயக அடியார்கள்.*

(40070)(32-11-17)

**டிஜிற்றல் கலர் போட்டோ கோப்பி அறிமுகம்**



**அனைத்து வகையான ஸ்ரிக்கர், தடித்த மட்டைகள், பேப்பர் வகைகள் போன்றவற்றில்**

1) CD, DVD கவர்கள்
2) அழைப்பிதழ்கள், வாழ்த்து மடல்கள்.
3) புத்தகங்கள், அதற்கான வெளிப்புற அட்டைகள்.
4) துண்டுப் பிரசுரங்கள்.

*போன்றவற்றை மிகக் குறைந்த கட்டணத்தில் துரித பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள -*

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/45150) (54-17-19-24)

## வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையவராக இருந்து தற்போது வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் பதவி உயர்வைப் பெற்று சேவை செய்ய சென்றுள்ள **திரு ஆனந்தராசா** அவர்களை வாழ்த்துகின்றோம்.

**தன்னைப் போல் மற்றவர்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என நினைக்கும் அவர்கட்கு கிடைத்த பதவி உயர்வுக்காக வாழ்த்துகின்றோம்.**

**மேசியா நகை மாடம்**
237, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**திரு ஆனந்தராசா**

Jayoda ஜயோதா ජයෝදා

# உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7205874 முதல் 7217961 வரை சீட்டிழுப்பு இல. 168 திகதி 15-9-2005

வெற்றி எண்கள் **2 9 9 2 9 1** சுப்பர் எண் **25**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,47,89,375/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,47,89,375/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 107 | 5,000/- | 5,35,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,038 | 500/- | 5,19,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,431 | 50/- | 5,21,550/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,03,337 | 10/- | 10,33,370/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 1,000/- | 1,04,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,041 | 100/- | 1,04,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,336 | 20/- | 2,06,720/- |
| | | மொத்தம் | 45,68,740/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 51,71,340/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **15,079,325/-**

தொடர் இல. 6278527 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 19 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 7206774-1-67 |
| கம்பஹா | 7208821-5-20 |
| அனுராதபுரம் | 7214295-9-07 |
| மாத்தளை | 7209005-6-03 |
| மாத்தறை | 7206944-2-48 |
| கொழும்பு | 7217804-3-36 |
| புத்தளம் | 7207273-9-02 |
| அம்பாறை | 7205928-9-33 |



## யா/யூனியன் கல்லூரியில் பாராட்டுப்பெறும் இவர்கள்

எமது கல்லூரி மாணவர்கள் இவ்வாண்டில் ஆற்றிய சாதனைகளைப் பாராட்டும் முகமாக இன்று (17.09.2005) சனிக்கிழமை விழா நடைபெறுகின்றது.

- தேசிய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட 19 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர்.
- சின்மயா மிசன் தேசிய மட்ட நாடகப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றோர்.
- சின்மயா மிசன் தேசிய மட்ட வினாடிவினாப் போட்டியில் இரண்டாம் இடம்பெற்றோர்.
- மகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற 15 வயதுப்பிரிவினர். 2ஆம் இடத்தைப் பெற்ற 17 வயதுப் பிரிவினர்.
- மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற செல்வி க.கீர்த்தனா.
- மாகாண மட்ட தமிழ்த்தின பேச்சுப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற செல்வன் யோ.சுதாகரன்.
- க.பொ.த. (உ/த) 2005 இல் 3A சித்திகளைப் பெற்ற.

*மு.சொருபினி, செ.சிவசொருபன், ம.மயூரி,*
*சி.சிறிதரன், செ.திருக்குமரன் த.மோகனடயானி.*

- மக்கள் வங்கியின் சாதனையாளர் விருது பெற்ற **செல்வி வி.ஜீவிகா**

ஆகியோரை இன்றைய நன்நாளில் பாராட்டும் அதேவேளை, மேலும் கல்லூரிக்குப் பெருமை சேர்த்திட வாழ்த்தி நிற்கிறோம். (40113)(30)

பழைய மாணவர் சங்கம், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.


## சைக்கிள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.17

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நடத்தும் கழகத்தின் 11 ஆம் ஆண்டு நிறைவும், சைக்கிள்கள் வழங்குதலும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டாரிகுளம் விபுலானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்னும் பொருளில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும். தொடர்ந்து கழகத்தின் 12ஆவது ஆண்டுக்கான பொதுக் கூட்டம் நடைபெறும்.

(6-204)


### நல்லூர் பிரதேச சபை
### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்
### விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி நீடிப்புச் செய்தல்

நல்லூர் பிரதேச சபையால் உதயன்/தினக்குரல் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட கேள்விகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி கீழ்காட்டப்படும் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 09.09.2005ஆம் திகதி தொடக்கம் - 22.09.2005ஆம் திகதி பி.ப. 3 மணிவரை.
- கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 23.09.2005 நண்பகல் 12 மணி வரை.
- கேள்வி திறக்கப்படும் திகதி 23.09.2005 பிற்பகல் 2.30 மணி.

*தலைமை அலுவலகம்,* **பொன்னையா வைரமுத்து**
*நல்லூர் பிரதேச சபை,* **செயலாளர்,**
*திருநெல்வேலி.* 16-09-2005 (அ-45162)(30) **நல்லூர் பிரதேச சபை.**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரஞ்சோதி செல்லம்மா



வேலணை கிழக்கைச் சேர்ந்த பரஞ்சோதி செல்லம்மா அவர்கள் 14.09.2005 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பரஞ்சோதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கதிரவேலு - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவராசா (யுனைற்ரெட் - மேர்ச்சன்ற்), அருள்ராஜா (லண்டன்), செல்வராணி, யோகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நேசராணி (கொழும்பு), பத்மாவதி (லண்டன்), சரவணநாதன் (தபாலதிபர்- யாழ்ப்பாணம்), மலர்தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புச் சகோதரியும், சபாரெத்தினம், காலஞ்சென்றவர்களான பாக்கியம், துரையப்பா, சண்முகநாதன், அப்புத்துரை மற்றும் செல்லாச்சி அவர்களின் மைத்துனியும், பூபதியின் சகலியும் நிசாந், நம்மியா, லண்டனில் வசிக்கும் அஜந்தன், ஆரணன், அரவிந்தன் மற்றும் ஆதீபன், துசாணி, பிரான்ஸில் வசிக்கும் அகிலன், அனுசன், அனுசியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2005) ஞாயிற்றுக்கிழமை, இல.2, பிள்ளையார் வீதி, தபால் பெட்டிச் சந்தி, பலாலி றோட், திருநெல்வேலி இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.2, பிள்ளையார் வீதி,*
*தபாற் பெட்டிச் சந்தி,*
*பலாலி றோட், திருநெல்வேலி.* (40105)(30)
*T.P.:-021 4590957, 2529114*

**தகவல்:**
**ப.சிவராஜா**
**(மகன்).**

## திருமதி சின்னையா வள்ளிப்பிள்ளை



சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த திருமதி சின்னையா வள்ளிப்பிள்ளை நேற்று (16.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணன் சின்னையாவின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம் (ஜேர்மனி), பாக்கியம், இலக்சுமி, சுபத்திரா, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, விமலேஸ்வரி, புவனேஸ்வரி, சிவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரபுரம்,*
*மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.*
*T.P.:- 0779167251, 0777243713.* (அ-45168)(30)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வல்லிபுரம் மகாலிங்கம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகாலிங்கம் நேற்று (16.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் தவமலரின் அன்புக் கணவரும் பஞ்சலிங்கம், ஈஸ்வரி அம்மா, காலஞ்சென்ற சிவலிங்கம், செல்வலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கோகுலன் மற்றும் கயல்விழி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2005) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற் பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பிலாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (அ-45171)(30)

*மண்டுமண்டை, சண்டிலிப்பாய் வடக்கு.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வேலுப்பிள்ளை



கரவெட்டி கிழக்கு, பூம்புகாரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் முருகேசு வேலுப்பிள்ளை (மு.வே) அவர்கள் 15.09.2005 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சின்னாச்சி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கண்ணகையின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியத்தின் மைத்துனரும், Dr.இளங்கோவன் (U.K.), திருமதி விமலேஸ்வரன் இந்திராணி (ஆசிரியை-கொட்டாஞ்சேனை புனித அன்னம்மாள் மகளிர் மகாவித்தியாலயம்), Dr.இளஞ்செழியன் (குளோபல் வெள்ளவத்தை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.றெஜினா (U.K.), விமலேஸ்வரன் (சட்டவரைஞர் திணைக் களம்) ஆகியோரின் மாமனாரும் கிறிஸ்த்தோபர், விக்ரோறியா, இளநகை, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவ்ார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை F.A. றேமன் மலர்சாலையில் சனி, ஞாயிறு தினங்களில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் (19.09.2005) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு மலர்சாலையில் இடம்பெற்று, கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*245/1, காலி வீதி, பம்பலப்பிட்டி,*
*கொழும்பு - 4.*
*தொ.பே. 0777 383653,*
*0777 916678, 0777 283501.* (40112)(30-11-45)

**தகவல்:**
**Dr.வே.இளஞ்செழியன்**
**(மகன்).**

## தம்பையா ஆனந்தரட்ணம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்,யாழ்ப்பாணக் கல்லூரி,O.B.A. தலைவர்)*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா ஆனந்தரட்ணம் அவர்கள் நேற்று (16.09.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை -நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நகுலாம்பிகையின் அன்புக் கணவரும் நிர்மலாதேவி(ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற நிரஞ்சனாதேவி,சுசீலாதேவி,சிவறஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குணரத்தினம், ஆறுமுகநாதன், நித்தியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாளா, சிவரூபன் ஆகியோரின் அன்பு மாமனும் சிவராம்,உமாராம் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(18.09.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக வளுக்கையாற்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

*வட்டு. மேற்கு,*
*வட்டுக்கோட்டை.* (40100)(30-11-45)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


**படிவம்**

இலங்கை அதிபர் சேவை தரம் 3,2 - II மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

BHARATHI PATHIPPAKAM
430, K.K.S. ROAD,
JAFFNA.

**பூங்கன்றுகள் விற்பனைக்கு**

சகல வகையான பூங்கன்றுகள், சாடியுடனும், தனியாகவும் விற்பனைக்குண்டு (சைபிறஸ், அலெக்கெரியா, யூக்கோப்பியா, போகன்விலா, சிதம்பரத்தை, குறோட்டன், றெசினா, இன்ரோர்க்குளான், ஐந்தூரியம்.

தொடர்பு: *கரிஸ் கார்டின்,*
*நந்தாவில் ஒழுங்கை,*
*(செம்பியன்லேன்)*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*
T.P.No: 0776524970 (40088)(26-

**பிரத்தியேக வகுப்புகள்**

**பௌதிகவியல் By: கருணாநிதி.**

பரீட்சை எழுதிய மாணவருக்கு
SAT,SUN - 10 - 12 a.m.
ஆரம்பம்: 17.09.2005
**54,கலைமகள் வீதி, அரியாலை.**
*T.P.:- 0776183064* *(40061)*

**அளவெட்டி வடக்கு**
**அறிவொளி சனசமூக நிலையம்**

அறிவொளி சனசமூக வளர்ச்சி நிதிக்காக மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

**இடம்: கந்தரோடை சவாரித்திடல்**
**காலம்: 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: பிற்பகல் 2 மணி**

*(40107)* - **நிர்வாகிகள்.**

**S.L.A.S. போட்டிப் பரீட்சைக்கான**
**மாதிரி வினாத்தாள் வகுப்பு**

- பொதுவிவேகம்
- பொது அறிவு
- கட்டுரையும் சுருக்கமும்.

ஒவ்வொரு ஞாயிறும் 10-1 மணிவரை D.M.I. வெலிங்டன் சந்திக்கு அண்மையில் நடைபெறும். *(40107)*


# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
*சிவநேசன்*
*ரவீந்திரன் (ரவி)*
அவர்களின் பாசமிகு
மாமனார்
**வல்லிபுரம்**
**மகாலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம். (அ.1070)(30-11-45)

*T.P.:- 0776503137* **அளவையூர் நண்பர்கள்.**

நோர்வேயின் புதிய அரசில்

# வெளிவிவகார அமைச்சர் பதவி சொல்ஹெய்முக்குக் கிடைக்காது?

எரிக் சொல்ஹெய்மின் இடதுசாரி சோஷலிஸ்ட் கட்சி இடம்பெற்றுள்ள சிவப்பு - பச்சை கூட்டணி நோர்வே பொதுத்தேர்தலில் வெற்றியீட்டியுள்ள போதிலும், அந்த நாட்டின் அடுத்த வெளிவிவகார அமைச்சராகும் வாய்ப்பு சொல்ஹெய்முக்குக் கிடைக்காது என ஒஸ்லோ அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சொல்ஹெய்ம் நியமன எம்.பியாகி, புதிய அமைச்சராகவும் வாய்ப்புள்ளது. அநேகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக அவர் நியமிக்கப்படலாம் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தேர்தலில் வெற்றிபெற்ற சிவப்பு - பச்சை கூட்டணியில் தொழில் கட்சியே பிரதான இடம் வகிக்கின்றது. அதன் தலைவரான ஜோன்ஸ் ஸ்டோல்ட்டன் போர்க் எதிர்வரும் 15ஆம் திகதி புதிய நோர்வேப் பிரதமராகப் பதவியேற்கவிருக்கிறார்.

புதிய அரசு அமைப்பது தொடர்பான பேச்சுகள் ஒஸ்லோவில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. புதிய பிரதமரின் தொழில் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களே நோர்வேயின் புதிய வெளிவிவகார அமைச்சராகவும், பிரதி வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஒஸ்லோத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், பிரதி வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து தற்போது வெளியேறும் விடார் ஹெல்கிஸன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் இலங்கை சமாதான முயற்சிகளுக்கு அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் நடவடிக்கை தொடர்பான விடயங்களில் நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர்களாகத் தொடர்ந்தும் பணியாற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. புதிய நோர்வே அரசு பதவியேற்றதும் அந்த அரசும் தொடர்ந்தும் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் விடயத்தில் அனுசரணைப் பணி வகிக்கத் தயாராக இருக் கின்றது என்பதை அந்த அரசின் சார்பில் புதிய பிரதமர், இலங்கை ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் உத்தியோக பூர்வமாக கடிதம் மூலம் அறிவிப்பார் எனத் தெரிகிறது.

இலங்கை ஜனாதிபதியிடமிருந்தும் புலிகளின் தலைவரிடமிருந்தும் முறைப்படியாகப் பதில் கிடைத்ததும், இலங்கை விவகாரத்தில் தனது அனுசரணைப் பணியை புதிய நோர்வே அரசு முடுக்கிவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மத்தியில் புதிய நோர்வே வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கும், வன்னிக்கும் விஜயம் செய்து இலங்கை அரசுத் தலைவர்களையும் புலிகளின் தலைவர்களையும் சந்தித்து அறிமுகம் செய்துகொள்ளவும் வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகின்றது.

"நோர்வே அரசு மாறினாலும், அனுசரணைப் பணியில் மாற்றம் இருக்காது."- என்று புலிகளின் தலைவர் ஒருவர் நம்பிக்கை வெளியிட்டார். (எ)

## புலிகளின் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 180 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டிருக்கும் ஐ.நாவின் 60ஆவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று உரையாற்றினார். ஐ.நாவின் 50ஆவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் 1995ஆம் ஆண்டு நடந்தது. அந்தக் கூட்டத்திலும் இலங்கையின் ஜனாதிபதியாகத் தானே கலந்துகொண்டு பேசினார் எனவும் ஜனாதிபதி தனது உரையின்போது நினைவுகூர்ந்தார்.

இப்பொழுது 60ஆவது வருடாந்த கூட்டத்தில் பங்குபற்றத் தமக்கு வாய்ப்புக் கிடைத்திருப்பது பெரும் பாக்கியமே என்றும் அவர் சொன்னார்.

ஜனாதிபதி தமது உரையில் கூறியதாவது:-

உலக நாடுகள் பலவும் பயங்கரவாதத்திற்கு முகம்கொடுத்துக்கொண்டிருக்கின்றன. பயங்கரவாதம் இன்று பூகோளமயமாகி விட்டது. இந்தப் பிரச்சினை குறித்து 1995ஆம் ஆண்டும், 2000ஆம் ஆண்டும் இங்கு பேசப்பட்டது. ஆனால், ஒட்டுமொத்தமான நடவடிக்கைகளும் நிலுவையிலேயே இருக்கின்றன.

எங்கள் நாட்டில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்கு இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன் எனது அரசாங்கம் பேச்சு மூலம் தீர்வைக் காணும் துணிகரக் கொள்கையை முன்வைத்தது. அத்தோடு தனியரசிற்கு பதிலாக சமஷ்டி ஆட்சி முறையையும் முன்வைத்தது. மோதலுக்கு முடிவு கட்டும் முகமாக எனது அரசு ஆயுதக் குழுவான விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியது. நாளடைவில் நாங்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்றை செய்வதற்கு முன்வந்தோம். இந்த யுத்தநிறுத்த காலத்தில் நாடெங்கிலும் மனித உரிமைகளைப் பேணுவதற்காக நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம். சமாதான முன்னெடுப்புகளைப் பொறுத்த வரையில் பதவிக்கு வந்த அரசுகள் விடுதலைப் புலிகளுக்கு சமாதான பேச்சுகளை முன்னெடுப்பதற்கு பல்வேறு வசதிகளைசெய்தன. சமாதான முன்னெடுப்புகளில் அனுசரணையாளராக இருந்து உதவிய நோர்வே அரசின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் அவர்கள் சேவையாற்றியுள்ளனர்.

சமாதான முன்னெடுப்புகளின்போது விடுதலைப் புலிகள் வெளிநாடுகளுக்குச் சென்றுவரக்கூடிய பல்வேறு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன. அனுசரணையாளர்களின் நல்லெண்ணம் இதற்கு துணைபுரிந்தது. எனினும், விடுதலைப் புலிகள் பயங்கரவாத வழிமுறைகளிலிருந்து விலகவில்லை என்பதை வெளிவிவகார அமைச்சரின் அண்மைய கொலையும், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் தொடர் நடவடிக்கைகளும், அரசியல் பழிவாங்கல் நிகழ்வுகளும் சான்றாக இருக்கின்றன.

சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வரும் ஆயுதக் குழுவொன்றின் இத்தகைய நடவடிக்கைகள் சமரச பேச்சு மூலம் தீர்வு காணும் செயற்பாட்டுக்கு ஒருபரிசோதனைக் களமாக இருப்பதாகவே பெரும்பான்மை மக்கள் நினைக்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் இராணுவ நடவடிக்கைகள் மூலம் பதிலளிக்கலாம். இருந்தபோதிலும் நாங்கள் அதை நிராகரித்துவிட்டோம். அத்தோடு யுத்தநிறுத்த உடன்படிக்கையிலும், அரசியல் தீர்விலும் எமக்குள்ள பற்றுறுதி காரணமாக நாங்கள் மாற்று அணுகுமுறையொன்றின் மூலம் அணுகியிருக்கிறோம். இதேவேளை, இந்தக் குழுவினருடன் முன்னர் நடத்திய சமாதான அணுகுமுறைகளையும் மீளாய்வுக்குட்படுத்தியுள்ளோம். இந்த மீளாய்வின் பிரகாரம் நிலையான சமாதானத்துக்கான பேச்சுகளில் நாங்கள் ஈடுபடுவதற்கு வசதியாக சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளுக்கு உண்மையான அழுத்தம் கொடுக்க வேண்டும். இங்கு நிலையான சமாதானமென்பது, மனித உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் பேணிப் பாதுகாக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

தீவிரவாதக் குழுக்களுடன் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்போது, ஒருபுறம் உண்மையான சமாதானத்துக்கு வழிவகுக்கக் கூடிய நடைமுறைகளைக் கையாளும் அதேவேளை மறுபுறம் அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்கப்படவும்வேண்டும். இதுபோன்ற ஏற்பாடுகளில்லாமல் - ஜனநாயக விழுமியங்களைப் பேணாமல் - ஆயுதக் குழுக்களுடன் வலுவான பேச்சுகளில் ஈடுபடுவது கடினமானது - என்றார். (எ-க)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏம்.சி. அபயசிங்க பண்டா தெரிவித்தார்.

இரவு உணவு மற்றும் குடிபானங்கள் எடுத்துச்சென்றபோதே இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் மா.இளஞ்செழியன் மேலதிக விசாரணையினை மேற்கொள்ளு மாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ-164)

# பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டத்தில் திருத்தம் வருகின்றது!

கொழும்பு, செப்.17

பதின்மூன்று முதல் பதினாறு வயது கொண்ட இளம் யுவதிகளுடன் அவர்களின் விருப்பத்துடன் பாலியல் உறவு வைப்பது இனிமேல் கிரிமினல் குற்றமாகாது. அதற்கேற்ற வகையில் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தற்போதைய சட்ட ஏற்பாடுகளின்படி- 16 வயதுக்கு உட்பட்ட பெண் எவருடனும் அவருடைய இணக்கப்பாட்டுடனும், விருப்பத்துடனும் பாலுறவு கொண்டால்கூட அதில் சம்பந்தப்பட்ட ஆணுக்கு பத்து வருடம் வரை சிறைத் தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய செயற்பாடு குற்றவியல் தண்டனைச் சட்டத்தின்கீழ் பலாத்காரமாகவும், பாலியல் வல்லுறவாகவும் கணிக்கப்பட்டே இந்தத் தண்டனை வழங்கப்படுகிறது.

இதனால் சம்பந்தப்பட்ட இருவரும் தமது சுய விருப்புடனேயே பாலியல் தொடர்பை வைத்துக் கொண்டபோதிலும் பக்கச் சார்பாக ஆண்கள் மட்டுமே தண்டனைக்குள்ளாக்கப் படுகின்றனர்.

இதனைத் திருத்தும் வகையிலேயே குற்றவியல் தண்டனைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. எனினும், 13 வயதுக்கு குறைந்த சிறுமிகளுடன் சேட்டை விடுபவர்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது.

இனிமேல் 13 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய யுவதிகளுடன் அவர்களின் விருப்பத்துடன் உடலுறவு கொண்டால் அது குற்றமாகாது.

இதற்கான திருத்தச் சட்டம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதுதொடர்பாக அமைச்சர் டபிள்யூ.டி. ஜோன் செனவிரத்னவினால் முன்வைக்கப்பட்ட சிபார்சுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார்.(எ)

## சிவராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி விசாரணை அறிக்கையை எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டு அத்திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார் நீதிவான்.

கொழும்பு, பம்பலப்பிட்டி, காலி வீதியில் வைத்துக் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி கடத் தப்பட்ட ஊடகவியலாளர் சிவராம் அன்றி ரவே சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் சடலம் விடியும்வேளையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகே கண்டுபிடிக்கப்பட்டது. (எ-க)

## புலிகளுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ரொன்ட் புருஹொவ்டே, நோர்வேயின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்தவுடன் அவருடன் இதுபற்றி விரிவான பேச்சுகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை அமைப்புகளின் கூட்டத்தின்போது இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் போர்நிறுத் தத்தின் நிலைமை ஆகியன குறித்து விரிவாக விளக்கப்படும்.

-இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (எ-க-ரி-12)

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அணிவகுப்பு நடத்த முற்பட்டபோது அதனைக் கோபி ஆட்சேபித் தார்.

கையில்லாத தன்னை எனையோரோடு சேர்த்து அடையாள அணிவகுப்பில் நிறுத்தினால் தன்னை அடையாளம் காண்பது இலகு என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து இவரைப் போன்று கையில்லாத சிலரைத் தேடிப்பிடித்து இவருடன் சேர்த்து நிறுத்தி அடையாள அணிவகுப்பை நடத்த நீதிவான் உத்தரவிட்டார்.

அதன்படி நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள மேல்நீதிமன்றக் கட்டடத்தில் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றில் மேலதிக நீதிவான் அஜித் அனவரத்ன முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

இந்த விவரம் தொடர்பாக சாட்சியமளிக்க வந்த பத்துச் சாட்சிகளில் எவருமே கோபியை அடையாளம் காட்டவில்லை.

இந்நிலையில் கோபியை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கோபி கைதுசெய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்துள்ள புலிகள் அமைப்பு அவரை விடுவிக்குமாறு வற்புறுத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கோபி விடுவிக்கப்பட்டால் தற்போது புலிகளினால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று பொலீஸாரையும் விடுவிக்க வாய்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அதையடுத்து நாடாளுமன்றப் பிரேரணை மூலம் அது மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது.

அடுத்து வரும் நாள்களில் அந்த ஒரு மாத நீடிப்புக் காலாவதியாக இருக்கையில், அது மேலும் நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த நீடிப்புக் குறித்து உறுதிப்படுத்துவதற்கான விடயம் எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (எ-க)

## சு.க. கொள்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது. பிணக்குக்குத் தீர்வு காணும் விடயத்தில் எமது கட்சி மாறாத - உறுதியான - நிலைப்பாட்டையே கொண்டிருந்து வருகின்றது. இந்தக் கணம்வரை கட்சியின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

கட்சியின் மாறாத கொள்கையை உறுதிப்படுத்துபவருக்கே கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடுவதற்கான நியமனம் வழங்கப்படும். கட்சி நிலைப்பாட்டை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை.

அமைதிக்கான அத்திபாரத்தை எமது கட்சியே போட்டது. அமைதி முயற்சிகளை நாமே முன்னெடுத்தோம். அதை யார் தொடர்ந்து முன்னெடுத்து வெற்றிபெற்றாலும், எம்மைத் தொடர்ந்து அதே வழியில் சென்றதால் கிடைத்ததாகவே அது இருக்கும் - என்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து, சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின்படி செயற்பட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இணங்கினால் மட்டுமே அவருக்கு கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனம் வழங்கப்படும் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. (எ-க)

SAAMSTECH
இன் இரண்டாவது இலவச நேரடி வகுப்பு
17.09.2005
(இன்று) றிம்மர் மண்டபம் யாழ். மத்திய கல்லூரி அருகில்
4 ஆம் பக்கம் பார்க்க

THE LEADING INDIAN IT COLLEGE
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
INDIA - SRI LANKA
அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
50% OFF
INTERNET & E-MAIL 1,000/=
(1 WEEK ONLINE CLASS)
OFFICE AUTOMATION
DESKTOP PUBLISHING
PHOTO MIXING 2,500/=
PROGRAMMING
HARDWARE
MULTIMEDIA 22,500/=
(ONE YEAR - 6 COURSES)
HIGHER DIPLOMA IN AUTOCAD 6000/=
ஆரம்பம்: 17,18,24,25 -09-2005
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
021-4590222 etouch@wow.lk

Jaffna Study Center of Colombo Theological Seminary
கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ். நிலையம்
கிறிஸ்தவ ஊழியர் பயிற்சி நெறி
இலங்கை சபை சரித்திரம்
(Sri-Lankan Church History)
விரிவுரையாளர்:- Bro. நெப்போலியன் பத்மநாதன்
திகதி:- 19-23 செப்ரெம்பர் 2005 காலை 9-2 மணி வரை
இடம்:- C.T.S. - Jaffna Center,
32/1, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ். நகர்.
(40054)

தமிழ்
DAY Paper 06
நாக.தமிழிந்திரன்
I சனி, ஞாயிறு - 8-9
II 20.09.05 - 7-9
ஒரு மாதம் கட்டணம் இலவசம்
பிந்திய அனுமதிக்குச் சலுகையில்லை
கையேடுகள், புத்தகங்கள் பேறலாம்.
BEACON யாழ்.

SEIENCE CENTRE
நெல்லியடி
A/L DAY CLASS
(40015)
Maths - ஜெயந்தன் Che. - அன்பழகன்
Bio. - அல்போன்ஸ் Phy. - பிரபா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.